Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 21 (13.02.2004) வெள்ளிக்கிழமை இதழ்:135

ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER SM | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் சில நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

தென்மராட்சியில் பஸ் விபத்து: ஒருவர் பலி! 23 பேர் காயம்!

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் - வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியில் இருந்து விலகி மின்கம்பத்துடன் மோதி தடம் புரண்டதில் ஒருவர் உயிரிழந்தார். 23 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் கைதடிப் பாலத்திற்கும் நுணாவில் சந்திக்கும் இடையே இடம்பெற்றது.

பாடசாலை மாணவி மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உட்பட 23 பேர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்ததுடன் ஒருவர் உயிரிழந்தார். காயமடைந்தவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது, சுன்னாகத்தில் இருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

வீபத்துக்குள்ளான மினிபஸ் வயல் வெளியில் தூக்கி வீசப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

(நெல்லியடி)

வடமராட்சி சுப்பர்மடப் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்தார், இந்த சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

உயிரிழந்தவர் சுப்பர்மடப் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் அசோக்குமார் (வயது 17) என அடையாளம் காணப்பட்டது.

சடலம் பருத்தித்துறை, மந்திகை வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வீட்டிற்கு மின் இணைப்பைப் பெறமுயன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

உயர்தரப் பரீட்சைத் திகதி இன்னமும் முடிவாகவில்லை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் மே மாதம் நடத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

இந்தப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக, இரண்டு யோசனைகளை பரீட்சை ஆணையாளர் நாயகம் - கல்வி அமைச்சின் செயலாளருக்கு முன்வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

புதிய நியமனங்கள், பதவியுயர்வுகள் தேர்தல் வரைக்கும் இடைநிறுத்தம்!

ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிவடையும்வரை பொதுச்சேவைக்கு எவரையும் நியமனம் செய்யவோ பதவியுயர்வோ வழங்கக்கூடாது என்று நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்தைக்கு ஜனாதிபதி சந்திரிகா நேற்று உத்தரவிட்டார்.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று சரித்த ரத்வத்தவுக்கு விடுத்த உத்தரவில்,

கடந்த எட்டாம் திகதி முதல் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும் காபந்து அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் பொதுச்சேவைக்கு எவரையும் புதிதாக நியமனம் செய்யவோ அல்லது பதவியுயர்வு வழங்கவோகூடாது.

இந்தக் காலப்பகுதியில் இடம்பெறும் நிய (12 ஆம் பக்கம் பார்க்க)

சுவீடன் நாட்டு எம்.பிகள் நேற்று கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று கிளிநொச்சிக்குச் சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தது.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் அபிவிருத்தித் திட்டமிடல் செயலர் தூயவன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வன்னியில் மேற்கொள்ளப்படவேண்டிய (12 ஆம் பக்கம் பார்க்க)

கொடிகாமத்தில் பெண் மீது பொலிஸார் பலாத்கார முயற்சி

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் காவலரண் அருகே உள்ள வீட்டிலிருந்த குடும்பப்பெண் மீது, பொலிஸார் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்ய முயறசித்தார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்றது. இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கடந்த செவ்வாய் இரவு ஒரு மணியளவில் பொலிஸார் ஒருவர் காவலரணுக்கு அருகில் இருந்த வீட்டினுள் அத்துமீறி நுழைந்து சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க குடும்பப் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்யமுற் (12 ஆம் பக்கம் பார்க்க)

மகா சிவராத்திரியை முன்னிட்டு சோதனைச் சாவடிகள் திறக்கும்

(கொழும்பு)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு, எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குச் செல்வதற்காக உயிலங்குளம், மடுவீதிச்சந்தி, ஓமந்தை சோதனைச் சாவடிகள் முழுநாளும் திறந்திருக்குமெனவும், முகமாலை இராணுவச் சோதனைச்சாவடி இரவு 9 மணிவரை திறந்திருக்கும் என்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுடன் இணைந்த 15 சிறுவர்கள் நலன்புரி நிலையத்தில் ஒப்படைப்பு!

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த பதினெட்டு வயதிற்கு குறைந்த 15 சிறுவர்களை புலிகள் கிளிநொச்சியில் யுனிசெவ் நடத்திவரும் நலன்புரி நிலையத்தில் நேற்று ஒப்படைத்தனர்.

நேற்றுமாலை 6.30மணியளவில் நடந்த இந்த நிகழ்வில், யுனிசெவ் பிரதிநிதிகளுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக, இணையத்தளம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் யுனிசெவ் அமைப்பினரால் எமக்குத் தரப்படும் பதினெட்டு வயதுக்கு குறைந்தவர்களின் பெயர்ப்பட்டியலை ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமித்துள்ளோம். அந்தக் குழு ஆராய்ந்து பதினெட்டு வயதுக்கு குறைந்தவர்களின் விபரங்களை கண்டுபிடிக்கும்போது, அவர்களை நாம் நலன்புரி நிலையங்களில் ஒப்படைக்கின்றோம்.

இவ்வாறு இந்தக்குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டவர்களில் பத்துபேர் கடந்த மாதம் 31ஆம (12 ஆம் பக்கம் பார்க்க)

கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் பெண்களையும் நிறுத்துங்கள்!

மனித முன்னேற்ற நடுநிலையம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் பெண் வேட்பாளர்களையும் நிறுத்துங்கள் என யாழ்.மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் செயலாளருக்கு மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தால் நேற்று அனுப்பப்பட்ட கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - எமது தாய்த்திருநாட்டில் தமிழ் மக்களாகிய எமது இன்றைய தேவையைக் கருத்திற்கொண்டு நீங்கள் எல்லோரும் ஒன்று (12 ஆம் பக்கம் பார்க்க)

வல்லிபுரக் குறிச்சியில்

மண் ஏற்றச் சென்றவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

(வடமராட்சி)

சட்டவிரோதமாக மண் ஏற்றச் சென்றவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வல்லிபுரக் கோவிலுக்கு அருகே வல்லிபுரக் குறிச்சி என்ற இடத்தில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் கன்ரர் வாகனம் ஒன்றில் 6 பேர் மண் ஏற்றுவதற்காகச் சென்றனர். இவர்கள் மீதே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் சேதமுற்ற கன்ரர் தடம்புரண்ட நிலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது!

அநுராவிடம் தூதுவர் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான விடயங்களில் எந்தவகையிலும் அமெரிக்கா தலையிடாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் பிரதம ஆலோசகரான அநுர பண்டாரநாயக்காவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் கொழும்பில் நேற்று சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலைகுறித்து அமெரிக்கா கவலையடைந்திருக்கின்ற போதிலும் இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலிலோ (12 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.எவ்)

யாழ். மாவட்டத்தில் சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாராவதற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜி.ஓ.) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வட - கிழக்கின் இனமுரண்பாட்டினால் மக்களின், குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கு மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வட - கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத் திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தித் திட்டங்கள் சமூகத்தை மையமாகக்கொண்ட சமூகத்தவர்களின் பூரணபங்களிப்போடு செயற்படுத்தப் படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும் அமுல்நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாகப் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங் களைச் செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு - கிழக்கில் திட்டங்களைச் செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

மாவட்டம்	உதவி அரசாங்க அதிபர் பிரிவு	கிராமம்
யாழ்ப்பாணம்	வடமராட்சி கிழக்கு	உடுத்துறை J/430
	வடமராட்சி கிழக்கு	ஆழியவளை J/431
	நல்லூர்	அரியாலை மத்தி J/96
	தென்மராட்சி	தாவளை, இயற்றாலை J/344
	யாழ்ப்பாணம்	பொம்மைவெளி J/87,88

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இதுபற்றி மேலதிக விபரங்களை வேலை நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை என்னிடமிருந்து (தொலைபேசி 222 3625 - தொலைநகல் - 222 5163 - மின்னஞ்சல் necordjf@sltnet.lk) பெற்றுக்கொள்ளலாம்.

இத் திட்டத்தை அமுல்நடத்தவிரும்பும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை எனக்கு 08-03-2004 மாலை 3 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்கவேண்டும்.

விருப்பத்தெரிவை அறிவிக்கும்பொழுது பின்வரும் விபரங்களை அது உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

1. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவு செய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரியாலம் முதலியன.
2. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம்பெற்ற துறையும்
3. வட - கிழக்கு மாகாணத்தின் புனரமைப்பு சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
4. விசேடமாக வட - கிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக் கைகள், சிறு குழுக்களை உருவாக்கும், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்கல் ஆகிய வற்றில் உள்ள அனுபவம்.
5. வட - கிழக்கில் தற்போது தங்களால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் தொகையும், கடந்த 5 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத் திட்டங்களின் விபரங்களும்.
6. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
7. விருப்புத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதனையும் அவை திருப்பி அனுப்பப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு.செ.பத்மநாதன்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்.
யாழ். மாவட்டம்

சி/2119

புலிகளின் திட்டவரைபின் அடிப்படையில் சமாதானப்பேச்சை மீண்டும் ஆரம்பிக்குக

இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகயோசனைகளை முன்கொண்டு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் நடத்துமாறு கோரப்போவதாக - புதிய இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

புதிய இடதுசாரி முன்னணியின் ஊடக மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் இடதுசாரித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோர் பங்கேற்றனர்.

இங்கு கருத்துத்தெரிவித்த விக்கிரமபாகு கருணாரட்ன -

மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திர கட்சியும் இணைந்து உருவாக்கியுள்ள புதிய முன்னணி நாட்டை யுத்தசூழ்நிலைக்குள் கொண்டுசெல்லப் போகிறது.

இந்த முன்னணி யுத்தவாத முன்னணியாகும். தமது முன்னணியின் நோக்கம் நாட்டில் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவருவதாகும். எனவே, தமது முன்னணி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை எதிர்த்து தேர்தலில் களமிறங்கும் வகையில் புதிய முன்னணியை உருவாக்கியுள்ளது.

இடதுசாரிகளின் இவ்வாறானதொரு முன்னெடுப்புக் குறித்து லங்கா சமசமாஜக் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாநாட்டில் கருத்துத்தெரிவித்த புதிய ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார - இடைக்கால நிர்வாக யோசனைகளை அடிப்படையாகக்கொண்டு மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டும் எனத் தாம் கோரப்போவதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற கலைப்பை பேரியல் அஷ்ரப் வரவேற்பு

நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதற்கான ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்கின்றேன். இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - முஸ்லீம் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டால், முஸ்லீம் சமூகத்துக்கு செய்யும் பெரிய உதவியாக இருக்கும், இதுபற்றி ரவூப் ஹக்கீம் எமது பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

சமாதானத்தை விரும்பாதவர்கள் என்று ஜே.வி.பி மீது தற்போது முத்திரை ஒட்டப்பட்டுள்ளது. நிச்சயமாக ஒரு காலத்தில் ஜே.வி.பி அப்படி கூறியிருக்கலாம். ஆனால், இப்பொழுது உள்ள ஜே.வி.பி சமாதானத்திற்கு எதிரானவர்கள் என்று நான் கருதவில்லை ஆனால், தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்கப்படுவதை அப்பட்டமாக எதிர்த்து வருகின்றனர். அப்படி எதிர்த்து வந்தாலும் கூட, இப்போது செய்யப்பட்ட உடன்படிக்கைப்படி பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று சொல்கின்றார்கள் என்றார்.



ஜரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் சுவீடன் நாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவதைக் காணலாம்.

பிரமுக வங்கியில் லஞ்சம் பெற்றதாக சந்தேகத்தின் பேரில் 20 பேர் கைது!

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட பாரிய நடவடிக்கைமூலம் பிரமுக வங்கியில் லஞ்சம் பெற்றதாகச் சந்தேகிக்கப்படும் அரச அதிகாரிகள் மற்றும் படை அதிகாரிகளென இருபது பேரைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இந்த இருபதுபேரும் கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது பிரதமநீதிவான் குசல சறோஜினி வீரவர்த்தன இவர்களைப் பிணையில் விடுவித்தார்.

மத்திய வங்கி - இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்குக் கொடுத்த முறைப்பாட்டையடுத்தே இந்த ஒரு நாள் நடவடிக்கையை லஞ்சஊழல் ஆணைக்குழுவினர் மேற்கொண்டனர்.

பிரமுக வங்கியில் பொதுமக்களால் 16 பில்லியன் வைப்பிலிடப்பட்டதில் 30 மில்லியன் லஞ்சமாகப் பெறப்பட்டுள்ளதாகவும், லஞ்ச ஊழல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்து பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேக நபர்களின் பெயர் விபரங்கள் வருமாறு -

சிறி ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையின் முன்னாள் தவிசாளர் சந்திமா ஆடம்சில்வா, கடற்படை அதிகாரி லெப்ரினன்ட் கொமாண்டர் சோமிலால் பிரியதர்சன ஜெயவர்த்தன. கொமடோர் ராஜன் சுரத் பொன்னாண்டோ, வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் ஜே.எ.ஜயரட்ண, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக் கணக்காளர் அனில் ராஜகருண, அகல வத்தை றப்பர் ஆராய்ச்சி நிறுவன பிரதம கணக்காளர் செனவிரத்ன பண்டார, மகாவலி அபிவிருத்தி பிரதம கணக்காளர் எம்.அப்துல் சித்தீக், காலி கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கிச் செயலாளர் வினிதா சமரவீர, டொம்பி சமுர்த்தி முகாமையாளர் தர்மதாஸ, அத்தனகல சமுர்த்தி முகாமையாளர் ஜே.எ.எல்.பிறேம சிறி, ஹெஹன சமுர்த்தி முகாமையாளர் எ.ஜயந்த அடேஷ், கல்வித் திணைக்கள கிராமிய சமூக செயலர் விக்ரர் சேனாரட்ண, கல்வித் திட்ட சமூக முகாமையாளர் எ.என்.எம்.பண்டார அத்தப்பத்து, கொழும்பு மாவட்ட கூட்டுறவுசங்க கிராமிய வங்கித் தலைவர் எ.எம்.றிச்சார்ட், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் நோகண பண்டார மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் சுனில சேனாரட்ண ஆகியோராவர்.

சமாதானப்பேச்சுத் தொடர்ந்திருந்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டியிருக்கும்

அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

இன்றைய காலகட்டத்தில் ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நடவடிக்கை சிறந்த செயலல்ல, இதனை எந்த வகையிலும் நான் அனுமதிக்கப் போவதில்லை என கண்டி மல்வத்த பீட மகாநாயக்கதேரர் ரம்புக்வெல்ல ஸ்ரீ விபக்ஸி தேரர் இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னிடம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென் கண்டி மல்வத்த பௌத்த பீடத்தின் மகாநாயக்க தேரரை சந்தித்தார்.

இதன்பின்னர் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் உடுகம ஸ்ரீ புத்த தேரரைச் சந்தித்து நிருபம் சென் உரையாடினார். இதன்போது கருத்துரைத்த உடுகம ஸ்ரீ புத்த தேரர் கருத்து எதனையும் தான் கூறவிரும்பவில்லை என்றும் இலங்கையில் பிரச்சினைகள் எழுகின்றபோது அது இந்தியாவிற்கும் பிரச்சினையாகவே இருக்கும் எனக் குறிப்பிட்டார். அண்மைக் காலமாக மேற்கோள்ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் நடைபெற்றிருக்குமேயானால் இன்று ஒரு உடன்பாட்டினைக் கண்டிருக்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

இவர்களது கருத்துகளுக்கு இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென் பதிலளிக்கையில் - இந்திய அரசு இலங்கையின் உள்விவகாரங்களில் எவ்வகையிலும் தலையிடப்போவதில்லை என்றும், அண்டை நாடான இலங்கை தமது சகோதர நாடு என்ற வகையில் இந்நாட்டில் நிரந்தர சமாதானம் வரவேண்டுமென இந்திய விரும்புவதாக அவர் கூறினார். (01)

அதிகாரப் பகிர்வுடன் சமாதானத்தை நிலைநாட்டுவதே எமது நோக்கம்!

டி.எம்.ஜயரத்ன கூறுகிறார்

நாட்டை இரண்டாகப் பிரிக்க இடமளிக்காமல் - அதிகாரப் பகிர்வுடனான சமாதானத்தை நிலை நாட்டுவதே எமது நோக்கமாகும்.

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றியீட்டி அரசாங்கத்தை அமைப்பதுடன் எதிர்வரும் புத்தாண்டை மிகக் குதூகலமாக் கொண்டாட வழிவகுக்கும் என புதிய அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சர் டி.எம் ஜயரத்ன தெரிவித்தார்.

டி.எம்.ஜயரத்ன அமைச்சராக பதிவியேற்றதையடுத்து கண்டி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

அங்கு அவர் பேசுகையில் - ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை மக்களின் வாழ்க்கைச் செலவும் தினசரி அதிகரித்து வருகின்றது. கண்டி மாவட்டத்திலேயே அமைச்சர்கள் கோடிகோடியாக நிதி ஊழலில் ஈடுபட்டிருக்கின்றனர். காணிகளை தங்கள் குடும்பத்தாருக்கும் பிள்ளைகளுக்கும் எழுதிவைத்துள்ளனர்.

இந்த நிலையில் நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் இவ்வாறான ஊழல்களை பகிரங்கப்படுத்துவோம். இன்று எம்முடன் பல கட்சிகள் இணைந்து விட்டன. சில தினங்களில் இன்னும் பல கட்சிகள் எம்முடன் கூட்டுச்சேரத் தயாராகியுள்ளன. என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

தேர்தலுக்குரிய செலவாக 60 கோடி ரூபாவை திறைசேரியிடம் தேர்தல் ஆணையாளர் கோரினார்!

நடைபெறப்போகும் தேர்தல்களுக்குரிய செலவீடாக 60 கோடி ரூபாவை திறைசேரியிடமிருந்து தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

முன்னைய தேர்தல் 2001 ஆம் ஆண்டு நடத்தப்பட்டபோது அதற்குரிய செலவீடாக 59 கோடி ரூபா செலவு ஏற்பட்டது.

ஏற்கனவே 2001 ஆம் ஆண்டில் இருந்த வாக்காளர்களிலும் தற்போது இருக்கும் வாக்காளர்கள் எண்ணிக்கை கூடியுள்ளது.

தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான செலவுகள் அதிகரித்து இருப்பதால் ஒரு தேர்தலை நடத்துவதற்கு 60 கோடி ரூபா நிதியை தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார். (01)

கிராம அலுவலர் தாக்கியதாக இளைஞன் முறைப்பாடு

கிராம சேவையாளரால் தாக்கப்பட்டதாக்த் தெரிவித்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இளைஞர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

நாவற்குழியைச் சேர்ந்த வி.நகுலேஸ்வரன் (வயது 24) என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்தவராவார்.

இவரது முறைப்பாட்டில் தனது சொந்த விடயமாக ஒரு கையெழுத்தைப்பெறச்சென்ற சமயம் தன்மீது ஏற்கனவே கொண்டிருந்த பகை காரணமாக தன்னை வாய்த்தர்க்கத்திற்கு வலிந்து இழுத்ததுடன் தன்னைக் கையால் தாக்கியதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவுருவப்பட திரைநீக்கம்

புங்குடுதீவு மகா வித்தியாலய ஆசிரியர் அமரர் த.சுதர்சனின் திருவுருவப்படத் திரைநீக்கமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று நண்பகல் 12 மணிக்கு அதிபர் க.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதிக்கு ஆதரவான பிரசாரத்தை தேர்தல் சட்டத்தின்கீழ் தடைசெய்யவும்

அரசாங்க ஊடகங்கள் ஜனாதிபதிக்கு ஆதரவான பிரசாரங்களை முன்னெடுத்துச் செல்வதனால் நடைமுறைத் தேர்தல் திட்டத்தின் கீழ் அதனைத் தடைசெய்யவேண்டும்.

இவ்வாறு ஜக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய - தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடைபெறும் சமயத்தில் அரச ஊடகம் செயற்படும் விதம் குறித்து தேர்தல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

இதன் அடிப்படையில் அரச ஊடகங்கள் அனைத்து கட்சிகளுக்கும் பக்கசார்பற்ற நிலையில் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

அரச ஊடகத்தைப் பொறுத்தவரையில் முழுமையாக பக்கசார்பாகவே செயற்பட்டுவருகின்றன. ஜனாதிபதிக்குச் சார்பாகவே பிரசாரம் இடம்பெற்றுவருகின்றது.

இதனை, உடனடியாக கட்டுப்படுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் முயற்சி எடுக்கவேண்டும் எனவும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (01)

அம்பாறை உள்ளூராட்சி தேர்தலை ரத்துச்செய்யுமாறு நீதிமன்றில் வழக்கு!

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை ரத்துச்செய்ய வேண்டும எனக்கோரி உயர் நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி கல்முனை பிரதேசசபை மற்றும் ஆறு கரையோரப் பிரதேசங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

இதில் 2002 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலை கொண்டவர்களே வாக்களிக்கமுடியும் என்பதால் தாம் உட்பட ஆயிரக்கணக்கானோர் தமது வாக்குகளைச் செலுத்த முடியாத நிலையில் இருப்பதாக மனுதாரர்கள் நால்வர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். இது தமது அடிப்படை உரிமையை மீறுவதாக தீர்ப்பளித்து குறிப்பிட்ட தேர்தலை ரத்துச்செய்ய வேண்டும் எனவும் இவர்கள் கோரியுள்ளனர்.

பாதுகாப்பு குறித்த கவலை இந்திய அணிக்கு வேண்டாம்

வசீம் அக்ரம் கூறுகிறார்

பாகிஸ்தான் பயணத்தின்போது இந்திய வீரர்களுக்கு பாதுகாப்பைப் பற்றி கவலை வேண்டாம் என்று பாகிஸ்தானின் முன்னாள் அணித் தலைவர் வசீம் அகரம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் இரு அணிகளும் மோதவிருக்கின்றன. 14 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய அணி பாகிஸ்தான் சுற்றுப் பயணம் மேற்கொள்வதால், எதிர்பார்ப்பு இரட்டிப்படைந்துள்ளது.

ஆனால், இந்திய அணித்தலைவர் கங்கூலி உட்பட முன்னணி வீரர்கள் சிலர் பாகிஸ்தானில் பாதுகாப்புப் பிரச்சினை இருக்கும் என்று கவலை தெரிவித்துள்ளனர். இது பற்றி இந்திய கிரிக்கெட் சபையுடன் விவாதிக்கவுள்ளதாகவும் கங்கூலி தெரிவித்தார்.

இதற்கிடையில் 3 பேர் கொண்ட இந்தியக் குழு பாகிஸ்தானில் இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுசெய்துவருகிறது. பரபரப்பான இந்தச் சூழ்நிலையில் இந்திய கிரிக்கெட் வீரர்கள் எந்தவித பயமும் இல்லாமல் பாகிஸ்தான் வரலாம் என்று, பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர் வசீம் அக்ரம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்-

பாதுகாப்பு பிரச்சினையை சாதாரணமாக யாராலும் ஒதுக்கிவைக்கமுடியாது. இருந்தாலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயணத்தை மனதில் கொண்டு பாதுகாப்பு பிரச்சினை குறித்த எண்ணத்தை இந்திய வீரர்கள் தூக்கி எறியவேண்டும்

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தான் அணியும் பாதுகாப்பு பீதியில்தான் இந்தியாவில் ஆடியது. ஆனால் இந்தியாவில் எங்களுக்கு அமோக வரவேற்புக் கிடைத்தது. அதுபோல, இந்திய அணிக்கும் உற்சாக வரவேற்புக் கொடுக்க பாகிஸ்தானியர்கள் காத்திருக்கிறார்கள் என்றார்.

இதேவேளை இந்திய வீரர்களுக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் உறுதியளித்துள்ளார். பாதுகாப்பை ஆய்வு செய்துவரும் இந்திய குழு பாகிஸ்தானின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் திருப்தி அடைந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இந்திய பயணத்தை கருத்தில் கொண்டு முன்னாள் கப்டன் இம்ரான்கான் பாகிஸ்தான் வீரர்களுக்கு பயிற்சி அளிக்கச் சம்மதித்துள்ளார்.

இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(நவிண்டில்)

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை பி.ப. 2.00 மணிக்கு அதிபர் இ.குட்டித்தம்பி தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்த விளையாட்டுப்போட்டியில் பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் சிவனருள்சுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

☆ ☆ ☆

கம்பர் மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் மு.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கரவெட்டி கோட்ட கல்வி அதிகாரி க.அம்பலவாணர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

☆ ☆ ☆

சென்யேம்ஸ் மகளிர் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பி.செந்தில்நந்தனும் சிறப்பு விருந்தினராக சென்யேம்ஸ் ஆலய பங்குத்தந்தை எவ்.எக்ஸ். சகாயநாயகமும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(58)

கரவெட்டி கோட்ட வலைப்பந்தாட்ட போட்டி

கரவெட்டி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் மைதானத்தில் எதிர்வரும் 16, 17, 18, 19, 20 ஆம் திகதிகளில் காலையும் மாலையும் நடைபெறும் எனவும், இதில் 24 பாடசாலை அணிகள் மோதவுள்ளதாகவும், வடமராட்சி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் வல்லிபுரம் தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி காலை எட்டுமணிக்கு

15 வயது 'ஏ' பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி.

17 வயது 'ஏ' பிரிவில் விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து ஞானசாரியார் கல்லூரியும் யா/கரணவாய் மகா வித்தியாலயத்தை எதிர்த்து யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயமும்

17 வயது 'பி' பிரிவில் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை எதிர்த்து யா/கம்பர் மலை அ.த.க. பாடசாலையும், யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை எதிர்த்து யா/தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

மாலை 2.00 மணிக்கு

19 வயது 'ஏ' பிரிவில் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை எதிர்த்து யா/கரணவாய் மகா வித்தியாலயமும், 19 வயது 'பி' பிரிவில்- யா/விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து யா/ஞானசாரியார் கல்லூரியும்,

15 வயது 'ஏ' பிரிவில் யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியை எதிர்த்து யா/ஞானசாரியார் கல்லூரியும், 15 வயது 'பி' பிரிவில் - யா/பொன்னம்பல வித்தியாலயத்தை எதிர்த்து யா/இமையாணன் அ.த.க.பாடசாலையும் மோதவுள்ளன. (12)

புதிய கட்சி ஆரம்பிக்கப் போவதாக நடிகர் விஜயகாந் அறிவிப்பு



விரைவில் அரசியல் கட்சி ஆரம்பிக்கப் போவதாக நடிகர் விஜயகாந் அறிவித்தார். மக்களவைத் தேர்தல் வரும் நேரத்தில் அவரது அறிவிப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஜினியும் விஜயகாந்தும் அரசியலுக்கு வரப்போவதாக அறிவித்துக்கொண்டே இருக்கிறார்கள். படங்கள் வெளிவரப்போகும் போது அரசியல் பேசுவது, பின்னர் அமெரிக்கா, இமயமலை புறப்படுவது ரஜினியின் ஸ்டைலாக இருந்துவருகிறது.

அதேபோல, நூறுபேர் கூடிவிட்டால் உடனே அரசியலுக்கு வருவேன் என்று பேசுவது விஜயகாந்தின் பாணியாக உள்ளது. ஆனால், கடந்த உள்ளாட்சித் தேர்தலில் தனது ரசிகர் மன்றத்தினரை நேரடியாக அரசியலில் இறக்கிவிட்டார் விஜயகாந்த். பல இடங்களில் அவர்கள் வெற்றியும் பெற்றனர்.

இந்தநிலையில் நேற்று திருச்சியில் தனது அனைத்து மாவட்ட ரசிகர் மன்றக் கூட்டத்தைக் கூட்டிய விஜயகாந்த் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்குச் சிறப்புப் பேட்டியளித்தபோது, விரைவில் தான் அரசியல் கட்சி தொடங்கப் போவதாகத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் மக்களை ஜாதி, மத ரீதியில் பிளந்துவிட்டன. இதை எதிர்த்து புதிய அரசியல் கட்சி தொடங்கப்போகின்றேன். அது ஜாதி, மதத்துக்கு அப்பாற்பட்டு இயங்கும்.

என்னை கட்சிக்குள் இழுக்க பா.ஜ.கவும் காங்கிரசும் முயன்றுவருகின்றன. எனது தந்தை காந்தியவாதி. தீவிரமான காங்கிரஸ்காரர். அதேபோல நானும் ஒரு காந்தியவாதியே.

கடந்த சில ஆண்டுகளாகவே தி.மு.க., அ.தி.மு.கவிடம் இருந்து ஒரு மரியாதையான தூரத்தில் விலகி இருக்கின்றேன் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் தனது மாவட்ட நற்பணி மன்ற நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்திய பின் கட்சி தொடங்குவது குறித்து முக்கியமான அறிவிப்பை விஜயகாந்த் வெளியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தித்துறை கோட்ட வலைப்பந்தாட்டப் போட்டி

பருத்தித்துறை கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற வலைப்பந்தாட்டத்தில் 15 வயது 'ஏ' பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையை எதிர்த்து வல்வை மகளிர் மகா வித்தியாலயம் மோதியது. இதில் 12:01 என்ற வித்தியாசத்தில் மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை வென்றது.

15 வயது 'பி' பிரிவில் வட. இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து புற்றளை மகாவித்தியாலயம் மோதியது. இதில் 35:0 என்ற வித்தியாசத்தில் வட.இந்து மகளிர் கல்லூரி வென்றது.

17 வயது 'ஏ' வட. இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து சென்.தோமஸ் நோ.க. பாடசாலை மோதியது. இதில் 50:1 என்ற வித்தியாசத்தில் வட.இந்து மகளிர் கல்லூரி வெற்றிபெற்றது.

(12)

யாழ். கோட்ட பாடசாலைகளின் கரப்பந்தாட்டப் போட்டிகள்

யாழ் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வருகின்ற கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று 2.30 மணிமுதல் நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

17 வயதுப் பிரிவில் சென் சார்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து, சென் ஜோசப் வித்தியாலயமும், 15 வயதுப் பிரிவிலும் இதே அணிகளும் அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

17 வயதுப் பிரிவில் வெற்றி பெறும் அணி யாழ் மத்திய கல்லூரியுடன் இறுதிப் போட்டியிலும், 15வயதுப் பிரிவில் வெற்றி பெறும் அணி யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியுடன் இறுதிப்போட்டியிலும் மோத உள்ளன.

இப்போடிகள் யாவும் ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (58)

விளையாட்டு

பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டுகள்

பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவான - வேரடி மண்ணின் தொடர்ச்சியாக விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதிமுதல் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டிகளில் - கிளித்தட்டு, வாரோட்டம், பேணிப் பந்து, கிட்டிப்புல், ஒப்பு ஆகிய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் அணிகளின் ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக 12 ஆம் திகதி தொடக்கம் பெண்களுக்கான களப் பயிற்சிகள், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஊடாக நடத்தப்பட்டுவருகின்றன.

இதேவேளை, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேரடி மண் பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய சபை விளையாட்டுவிழா கடந்த மாதம் 13 ஆம் திகதிமுதல் 26 ஆம் திகதி வரை 11 கிராமங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டிகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்றும், நாளையும் நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு:-

யாழ். சென்.ஜோனஸ் கல்லூரி மைதானத்தில் மனிப்பாய் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதும் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகி இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியினை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதும் போட்டி 2.00 மணிக்கு ஆரம்பமாகி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியினை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி மோதும் போட்டி 2.00 மணிக்கு ஆரம்பமாகி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் - ஸ்ரான்லி கல்லூரியினை எதிர்த்து யாழ்ப்பாண கல்லூரி மோதும் போட்டி ஒரு நாள் போட்டியாக காலை 9.00 மணிமுதல் நடைபெறவுள்ளன. (58)

ஆலோசனை சொன்ன நாயுடு சைக்கிளைப் பறிகொடுத்தார்

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அடிக்கடி சைக்கிள் ஓட்டும்படி பொதுமக்களுக்கு யோசனைகூறுவது வழக்கம். சைக்கிள் ஓட்டுவது நல்ல உடற்பயிற்சி. அது மனதுக்கும் உடலுக்கும் தெம்பைக் கொடுக்கும் என்று கூட்டங்களில் பேசி இருக்கின்றார்.

இவரது இந்த யோசனையை பிரசாரத்துக்கு வந்த சிலர் கடைப்பிடித்து விட்டார்கள்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தனது தெலுங்குதேசம் கட்சியின் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கினார். இதன் ஒரு பகுதியாக ராஜ முந்திரியில் அவர் தெலுங்குதேசம் கட்சித் தொண்டர்களின் சைக்கிள் பேரணியைத் தொடங்கிவைத்தார்.

சந்திரபாபு நாயுடு தனது புது சைக்கிளில் பேரணியில் முன் வரிசையில் சைக்கிள் ஓட்டிவந்தார்.

நீண்டதூர பயணத்துக்குப் பிறகு இந்தச் சைக்கிள் பேரணி முடிவடைந்தது. பேரணி முடிவில் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சந்திரபாபு நாயுடு தான் ஓட்டிவந்த சைக்கிளை மேடைக்கு அருகே நிறுத்திவிட்டு பொதுக்கூட்டத்தில் பேசினார்.

சிறிதுநேரம் பேசிவிட்டு அவர் மேடையில் இருந்து இறங்கிக் கீழே வந்து தனது சைக்கிளைத் தேடினார். அந்தச் சைக்கிளைக் காணவில்லை. யாரோ திருடிச்சென்று விட்டனர். தனது சைக்கிளைக் காணாததால் நாயுடு அதிர்ச்சியடைந்தார்.

அவருக்கு மிகவும் பழகிப்போன சைக்கிள் அது. சந்திரபாபு நாயுடுவின் சைக்கிள் அருகே நிறுத்தியிருந்த வேறு சில சைக்கிள்களையும் காணவில்லை. அந்தச் சைக்கிள்களை கட்சியின் வேறுசில முக்கிய தலைவர்கள் நிறுத்தியிருந்தனர்.

சைக்கிள் ஓட்டுங்கள் அது உடல் நலத்துக்கு நல்லது என்று உபதேசம் சொன்ன சந்திரபாபுநாயுடு தனது சொந்த சைக்கிளைப் பறிகொடுத்ததுதான் மிச்சம்.

மகிழங்கேணியில் முகாம் அமைக்க முயற்சி மக்கள் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது

சாவகச்சேரியில் படையினரால் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மகிழங்கேணி கிராமத்தில் - படையினர் மீண்டும் முகாம்களை அமைத்து, இராணுவ வேலிகளை அமைக்க எடுத்த முயற்சி, மக்கள் காட்டிய எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது.

சாவகச்சேரி நகரையண்டிய கரையோரப் பிரதேசங்களில் - படையினரால் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்த பிரதேசங்கள் சிலவற்றை படையினர் மீளப்பெற மேற்கொண்ட முயற்சி - மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இந்த நிலையில், ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள தமது நிலங்களுக்கு எல்லை போடும் நடவடிக்கையில் குடியிருப் பாளர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

சாவகச்சேரி - தனங்களப்பு வீதியின் கிழக்குப் புறமாக புனித லிகோரியார் தேவாலயம் வரையிலான கரையோரத்தின் ஒரு பகுதியை, படைத்தரப்பு அண்மையில் விடுவித்திருந்தது. இதற்கேதுவாக ஏற்கனவே அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு வேலியும் பின்னோக்கி நகர்த்தப் பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த செவ் வாய்க்கிழமை விடுவிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான "மகிழங்கேணி" கிராமத்திற்கு சென்ற படையினர், பின னோக்கி நகர்த்தப்பட்டிருந்த பாது காப்பு வேலியை மீண்டும் முன்பிருந்த இடங்களில் அமைக்கமுற்பட்டனர். எனினும், இந்தப் பகுதியில் மீளக்கு டியமரும் நோக்குடன் புனருத்தார ணப் பணியில் ஈடுபட்டிருந்த அந்தப் பகுதி மக்களால், இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், மீண்டும் அந்த வேலியை அங்கு நிறுவவும் அந்த மக்கள் அனுமதிக்கவில்லை.

இதையடுத்து, சம்பவம் தொடர் பாக யாழ்.மாவட்ட படைத்தலை மையகத்திற்குத் தெரிவிக்கப்பட் டதை அடுத்து, அந்த முயற்சி படை யினரால் கைவிடப்பட்டது. அத் துடன், பின்நோக்கி நகர்த்தப்பட்ட நிலையிலேயே புதிய பாதுகாப்பு வேலியை அமைக்கும் பணியிலும் படையினர் தற்போது ஈடுபட்டுள் ளனர். (202)

அண்மையில் இடம்பெற்ற நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவின் விளையாட்டு விழாவின்போது விளையாட்டு வீரர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும், அருகே நெடுந்தீவு விளையாட்டு உத்தியோகஸ்தர் மற்றும் பிரதம விருந்தினரையும், முதலாம் இடத்தைப்பெற்ற கழகத்திற்கு விழாவின் பிரதம விருந்தினர் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் காணலாம்.

திரைகலைசார் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அழைப்பு

சலன சித்திரம் அமைப்பினால் அமைக்கப்படவிருக்கும் நடன இசைக் குழுவிற்கு விண்ணப்பித்தவர்களுக் கான அவசிய நடவடிக்கை பற்றிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கும்,

சனசமூக நிலையங்களிற்கூடாக இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத் திக் கொடுக்கும்வகையில் - சலன சித்திரம் அமைப்பு நடத்த இருக்கும் இலவச திரைக்கலைசார் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக் கான அவசியக் கலந்துரையாடல் அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கும்- சலனசித்திரம், கொடிகாமம் வீதி, கர வெட்டி எனும் விலாசத்தில், சலன சித்திரம் சம்மேளன அமைப்பின யாழ். மாவட்டக்கிளைச் செயலகத்தில் நடைபெறவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ள விரும்பும் புதிய வர்களும் அனுமதிக்கப்படுவர் எனச் சலனசித்திரம் அமைப்பினர் அறிவித் துள்ளனர்.

தென்மராட்சிக் கரையோரப் பகுதிகளில் படையினரின் பாரிய மண் அணைகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரின் தெற்குப் புறமானவுள்ள தனங்களப்பு, கோகிலாக் கண்டி கரையோரக் கிராமங்களில் பாரிய மண் அணைகளை படையினர் கடந்த சில நாட்களாக அமைத்துவருகின்றனர்.

குறிப்பாக சாவகச்சேரி - தனங்களப்பு வீதியை அண்டிய பகுதிகளிலேயே இராணுவ கனரக வாகனங்கள்மூலம், இந்த மண் அணைகள் அமைக் கப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட பகுதிகளில் அமைத்துள்ள பாதுகாப்பு வேலிகளைப் படைத் தரப்பு அண்மையில் பின்னுக்கு நகர்த்திக்கொண்டதையடுத்தே, இந்த மண் அணைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிற. (202)

படைத்தரப்பு – புலிகள் சந்தித்துப் பேச்சு !

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைக்கும், யாழ்.மாவட்ட படைத்தலைமைக்குமி டையிலான சந்திப்பு நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ்.மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் இமையவன் உட்பட்ட போராளிகளும், படைத்தரப்பில் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத்தள பதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திர பால தலைமையிலான அதிகாரிகள் குழுவும் கலந்துகொண்டது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நல்லூர் கோவில் வீதி யிலுள்ள யாழ்.அலுவலகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பு - நண்பகல் 12 மணிமுதல் சுமார் 1 மணிவரை இடம்பெற்றது.

குடாநாட்டில் தற்போதைய சூழ லில் இருதரப்பும் சுமுகநிலையைப் பேணும் விதமாகப் பல முக்கிய விடயங்கள் தொடர்பாகப் பேச்சுக் களை நடாத்தியதாகத் தெரிவிக்கப் படுகிறது.

எனினும், இது வழமையான மாதாந்தச் சந்திப்பே என விடுதலை புலிகள் தெரிவித்தனர். (202)

பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவ னத்தின் "முயற்சி" திறன் விருத்தி மையத்தால் நடத்தப்பட்ட தொழில் பயிற்சிகளில் - பயிற்சிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றி தழ் வழங்கும் வைபவம் - நாளை காலை 10 மணிக்கு நிறுவன கேட் போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 2002-2003 ஆண்டுகளில் 'முயற்சி' பயிற்சி நிலையத்தில் மின் இணைப்பும் மீள் முறுக்கலும், தொலைக்காட்சி, வானொலி திருத்துதல், தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து, நவீன உடையமைத்தல், புத்தகம் கட்டுதல் ஆகிய பயிற்சி நெறிக ளில் பயிற்சிபெற்ற 350 இளை ஞர்கள், யுவதிகள் சான்றிதழ்க ளைப் பெறவுள்ளனர்.

நிறுவனத் தலைவர் அ.நல்ல தம்பியின் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்விற்கு - சட்டத்த ரணியும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய மா.தியாகராஜா பிர தமவிருந்தினராகக் கலந்து கொள்ள வுள்ளனர்.

நியாப் திட்டத்தின்கீழ் சுயதொழில் கடனுதவி

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின்நிதி உதவி யுடன் நியாப் திட்டத்தின்கீழ் 20 கிராமங்களைச் சேர்ந்த 600 பயனா ளிகளுக்குச் சுயதொழில் ஊக்கு விப்புக் கடன் உதவி இந்த ஆண்டு வழங்கப்படவுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவி யினைக்கொண்டு அரச சார்பற்ற நிறு வனங்களினால், ஒவ்வொரு கிரா மத்திலும் தெரிவுசெய்யப்பட்ட பய னாளிகளுக்குப் பணமாகக் கொடுக் காது, பொருளாகக் கொடுப்பதற் குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய - துன்னாலை மேற்கு, இருபாலை தெற்கு, துன் னாலை வடக்கு, அத்தாய், உடுப் பிட்டி தெற்கு, இமையாணன் மேற்கு, வேலணை தென்கிழக்கு, புன்னா லைக்கட்டுவன், இடைக்குறிச்சி, சர வணை கிழக்கு, புளியங்கூடல், காரைநகர், மத்தொனி, துன்னாலை தெற்கு, நவாலி தெற்கு, வல்லிபுரம், குடத்தனை, கப்புதூர், புலோலி தெற்கு போன்ற கிராமங்களிலுள்ள மக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குச் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக ஆடு, மாடு, கோழி, தையல் இயந்திரம் போன் றன கடன் அடிப்படையில் வழங் கப்படவுள்ளன. நியாப் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு கிராமங்களில் பொது நிகழ்வுகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் நடத்துவதற்குப் பொது மண்டபங்கள் கட்டிக்கொடுக்கப்ப டவுள்ளன.

இதற்கமைய 12 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என நியாப் திட்டள உதவியாளர் தெரி வித்தார்.

சின்னஞ் சிறு செய்திகள்

சர்வதேச மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறு வனம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் - நாவலர் கலாசார மண்ட பத்தில் கொண்டாடப்படவுள்ளது.

மார்ச் - 8 ஆம் திகதி நடைபெறும் இந்த நிகழ்வில் - கிராம மட்டப் பெண்கள் ஆற்றுகை செய்யும் நாடகங்களும், துறைசார் வல்லுநர்களின் கருத்துரைகளும், பெண்கள் அபிவிருத்தித்திட்ட உத் தியோகத்தர்கள் வழங்கும் கவிதா நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

விளையாட்டு அணிகளுக்கான பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாவட்டத் தைச் சேர்ந்த மாவட்ட விளை யாட்டு அணிகளுக்கு ஒருமாத பயிற்சி யாழ்.மாவட்டத்தில் வழங் கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிகள் மார்ச் மாதம் அளவில் ஆரம்பமாகவுள்ளன. வடக்கு - கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட விளையாட்டு அணிகள் சிலவற்றைத் தெரிவு செய்து, அனைத்தையும் ஒன்றி னைத்துப் பயிற்சிகள் வழங்கப்பட வுள்ளன.

வடக்கு - கிழக்கு மாவட்டத்தி லுள்ள மாவட்டரீதியான அணி களை முன்னேற்றும் விதமாகவே இந்தச் செயற்பாடுகள் மேற்கொள் ளப்படுகின்றன எனத் தெரவிக்கப்ப டுகிறது.

உணவகம் உடைத்து பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள உணவகம் ஒன்றை உடைத்து, ஒரு லட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் திரு டப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் நள்ளிரவு இடம்பெற்றது.

உணவகம் ஒன்றின் ஓட்டைப் பிரித்துக்கொண்டு இறங்கிய திரு டர்கள், அங்கிருந்த ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருட்க ளைச் சூறையாடிச் சென்றனர். சம் பவ இடத்தை யாழ்.பொலிஸார் சென்று பார்வையிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

ஸ்ரான்லிக் கல்லூரியில் ஒருநாள் செயலமர்வு!

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் - நாளை காலை 8.30 மணிதொடக்கம் 3 மணிவரை ஜப்பானிய சர்வதேச ஒத் துழைப்பு ஏஜென்சி நிறுவனமான ஜெய்க்கா நிறுவனத்தின் அனுசர ணையுடன், ஒருநாள் செயலமர்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

பாடசாலைகளில் - கணித, விஞ்ஞான அறிவுகளை மேம்படுத்த வும் "5S" முறையில் பாடசாலை களின் நிர்வாகச் சீரமைப்புக்களை முன்னேற்றவும் - ஜெய்க்கா நிறு வனம் இந்த செயலமர்வில் ஆலோ சிக்கவுள்ளது.

ஸ்ரான்லிக் கல்லூரியின் அதி பர் வீ.மாணிக்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், அயற் பாடசாலைகளிலிருந்து சுமார் 50 பேர்வரை பங்குபற்றுவர். (55)

பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்கு அனுமதி

(நெடுந்தீவு)

2004 ஆம் ஆண்டுக்கான பின்தங்கிய கிராமங்களுக்கான குறித் தொகுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்மூலம் - வீதிதிருத்தம், மின்சார விஸ்தரிப்பு என்பவற்றுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

குடவிலி வெளிச்சவீட்டு வீதி திருத்துவதற்கு 4 இலட்சம் ரூபாவும், நெடுந்தீவு மத்தி, கிழக்கு மற்றும் மேற்கு பகுதி மின்சார விஸ்தரிப்புக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் மின்சார விஸ்தரிப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதிக்குரிய வேலை மதிப்பீட்டு திட்டங்களை உடன் தருமாறு - மின்சார சபையினரை நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் கோரியுள் ளார். (113)

நெடுந்தீவு வீதி புனரமைப்புக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு

(நெடுந்தீவு)

2004 ஆம் ஆண்டுக்கான பிர மான அடிப்படையிலான நிதி ஒதுக் கீட்டின்கீழ் - நெடுந்தீவு பிரதேச சபைக்கு இரு வீதிகள் புனரமைப் புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

நோ.க.ம.கல்லூரி வீதி, சாறப் பிட்டி வீதி என்பவற்றுக்கென தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டின்மூலம் இந்த வீதிகள் திருத்தம் செய்யப்படுவதனால், நீண்ட காலமாக மக்கள் அனுபவித்த பல இடர்கள் முடிவுக்குக் கொண்டுவரப் படும்.

இந்தவேலைகளை மேற்கொள் வதற்கு, மதிப்பீட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாக நெடுந் தீவு பிரதேசசபை விசேட ஆணை யாளர் தெரிவித்தார். (113)

பெண்ணுரிமைக்கு எதிரி

சிநேகிதியே

யாழ்.பல்கலைகழக்தின் இந்து நாகரிகத்துறைக்குத் தலைவராக இருக்கும் நாச்சியார் - செல்வநாயகத்தை சந்தித்தோம். சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் என்னும் முகவரியில் வசித்துவரும் இவரை நேர் கண்டபோது...

பொருளாதாரத்தில் பெண்களின் பங்கு முக்கியமானது. பெண் வேலைசெய்தால் என்ன, செய்யாவிட்டால் என்ன, சுயமாக வீட்டிலிருந்து வேலை செய்பவர்களும் இருக்கின்றார்கள் அல்லது தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களும், அரசாங்க வேலை செய்பவர்களும் இருக்கின்றார்கள். எந்த வகையிலும், வீட்டிலே தாய் என்ற முக்கியமான இடம் பெண்ணிற்கு இருக்கின்றது. அந்தவகையிலே தொழில் செய்து கொண்டுவருகின்ற பணத்தைச் சரியான வழியிலே செலவு செய்கின்ற பெண் வீட்டிற்கு வரப்பிரசாதம் என்றுதான் சொல்லுகின்றேன். பொருளாதாரத்தை சரியானமுறையில் பயன்படுத்துகின்ற பெண் சரியானவள்தான்.

இந்தநிலை மாத்திரமல்ல, பெண்கள் எவ்வளவுதான் கல்வி கற்றிருந்தாலும், பெண்களை அடிமைப்படுத்துகின்ற ஒரு போக்கும் சமூகத்திலே காணப்படுகின்றது. என்னைப் பொறுத்தவரையிலே - ஆணும், பெண்ணும்தான் படைப்பு அதிலே உயர்வு தாழ்வு இல்லை.

எல்லாப் புத்தகங்களிலும், சமயங்களிலும் பெண்ணுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால், அது நடைமுறையிலில்லை. சீதனமானது பெண்ணுக்குப் பெரும் பிரச்சினையாகவே இருக்கிறது. ஆண்கள் தங்களை உயர்த்தி பெண்களிடம் வலியுறுத்தி வாங்குகின்றார்கள்.

தாய்க்குரிய பொறுமைக்கும், அதற்குரிய அன்புக்கும் விலையே இல்லை. ஒரு தாய் அடிமைப்படுவதா? ஒரு பரஸ்பர உறவிலேதான் வாழ்க்கை இருக்கின்றது. எனவே பணத்தைக் கொண்டு வாழ்வைத் திட்டமிடல் ஆகாது. உண்மையான அன்பும், உண்மையான அறிவும் இணையும் போதுதான் அது வாழ்க்கையாக அமையும். நாங்கள் எல்லோரும் கற்றவர்கள் என்று சொல்லுகின்றோம் இந்தப் புரிந்துணர்வு எத்தனை குடும்பங்களில் இருக்கின்றது.

மருத்துவர்கள், பேராசியரியர்கள், விரிவுரையாளர்கள் என்று எத்தனையோ தொழிலிலே முன்னுக்கு நின்றாலும் உண்மையிலே ஒரு புரிந்துணர்வு இருக்கிறது என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஏதோ அப்படி இப்படியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இது பெரிய வெக்கக்கேடான செயல். என்னைப் பொறுத்தவரையில் சீதனம் வாங்கக்கூடாது. கட்டாயப்படுத்தி வாங்கும்போது, உண்மையான வாழ்க்கை சோபிக்காது. "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்றது இல் வாழ்க்கை" என்றுதான் சொல்லப்படுகின்றது. ஆனாலும், பெண்கள் தனக்கு வருகின்ற கணவன் உயர்வாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைக்கின்றார்கள். கூடுதலான பெண்கள் இதைத்தான் நினைக்கின்றார்கள் பிறகு எப்படி சீதனப்பிரச் சினையை ஒழிக்கமுடியும்.

கல்வி கற்று உயர்பீடத்தில் இருந்து, நல்ல ஒழுக்கமாக இருந்தாலும், அவனைப்பற்றித் தூற்றுபவர்கள் இருக்கின்றார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது. அப்படிக் கவலைப்பட்டால் வாழ்கின்றது கஷ்டம். நானே எனக்கு நீதிபதியாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். ஒதுங்கி வாழ்ந்ததில்லை.

கணவரை இழந்த பெண்ணை ஒதுக்கி வைத்துத்தான் இன்றுவரை இருக்கிறது. இந்தச்சமூகம். ஏதோவொரு நல்ல காரியங்களுக்கு முன்னேபோக தடைசெய்கின்றார்கள். ஒருமாதிரிப்பார்க்கின்றார்கள். இந்த நிலைமாற வேண்டும். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று எவரும் இல்லை.

கல்விகற்றவர்களும் நல்ல நிலையில் இருக்கின்றார்கள். கற்றவர்கள்கூட பெண்களைப் பின்னுக்குத் தள்ளுகின்ற குணம் இருக்கின்றது. ஆனால், அப்படியொரு சட்டதிட்டமில்லை. தாய் என்பவள் ஒரு ஒழுக்கத்தின்பீடம் என்றுதான் சொல்லு வேன். தாய்க்கு இருக்கின்ற அன்பு, தெய்வீகப் பண்பு அதைத்தவிர உலகியே உயர்ந்தது எதுவுமே இல்லை என்று விவேகானந்தர் சொல்லுகின்றார்.

'நான் இந்து மரபிலே வந்த பெண் மேலைத்தேச பண்பாட்டிற்கும், எங்களுடைய பண்பாட்டிற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. மேலைத்தேயப் பெண்கள் ஒரு நேரம் ஒரு கணவரை விட்டாலும், மறுகணம் வேறு ஒரு கணவரைத் தெரிவு செய்தாலும், விசுவாசமாகத்தான் இருந்தார்கள்.

மனிதனை மனிதனாக்குவது அன்பு, ஒழுக்கம்தான் என்னுடைய வாழ்வில் 'கண்டது. எல்லாச் சமயங்களும் இதைத்தான் சொல்லுகின்றன. இந்து மதத்திலுள்ள ஞானிகள், சான்றுகள், பெரியோருடைய போதனைகளுடைய வாழ்வினூடே நான் கண்டது. பெண்ணிற்குச் மிக உயர்ந்த இடம் இருக்கிறது. ஆனால், நடைமுறையில் பல இடங்களில் பெண்ணிற்கு கொடுக்கக்கூடிய இடம் கிடைத்தது என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது.

கணவரை இழந்தால்கூட, தாய் என்ற இடத்தில் பிள்ளைக்கு ஆசீர்வாதம் செய்யலாம். இப்படி இருக்கின்றபோது, மற்றைய இடங்களில் ஏன் இவர்களுக்கு வரவேற்புக் கொடுக்கவில்லை என்றால், பெண்கள் பயப்படுகின்றார்கள். அதோடு படித்தாலும் அறிவில்லை என்று பின்னுக்கு நிற்கிறார்கள்.

மகளிர் மாநாடு அல்லது மகளிர் சங்கங்கள்மூலம் பெண்களுக்கு நிறைய தைரியத்தை ஊட்டுகின்றோம். விழிப்புணர்வையும் ஊட்டிவருகிறோம் இயற்கையினுடைய பிள்ளைகள். எனவே கணவன் இறந்தாலும் பெண்ணுக் குரிய உரிமை பறிபோகாது. எனவே ஒவ்வொரு மனிதனுடைய உரிமைகளையும் மற்றவர்கள் மதிக்கவேண்டும் ஒதுக்கமுடியாது. அந்தவகையில் ஒவ்வொரு பெண்ணும் அந்தந்த வழியிலே வாழ்வதற்கு சமூகம் வழிவகுக்கவேண்டும்

பெண்களினுடைய வாழ்விலே ஆன்மீகம் இருந்தால், கமூகத்தில் எந்தக் கொடுமைகளும், கெடுபிடிகளும் ஒன்றும் செய்யமுடியாது. பேராசிரியர் சோமசுந்தரத்தின் கருத்தரங்கிற்கு நான் தலைமை தாங்கினேன். பெண்கள் மாநாட்டிற்கு - அந்தமாநாட்டில் சோமசுந்தரம் சேர் என்னையும் பாராட்டினார்.

நான் எனது மகளுடன் சிநேகிதிபோல் தான் பழகுவேன். எமக்குள்ளே பலவிட்டுக் கொடுப்புகளும், என்னை நானே திருத்துவ

தும், என்பிள்ளை பிழைசெய்தால் நானே மன்னிப்புக் கேட்பேன். இதன்மூலம் கொடுக்கும் கூடுதலான தண்டனை வேறொன்று மில்லை.

பிள்ளைகளைத் தாங்களாகவே ஏதாவது முயற்சிசெய்ய விடவேண்டும்.

அத்தோடு அருகிலிருந்து ஏதாவது உதவியும் செய்யவேண்டும். பெண்களிடம் சேட்டை விடுகின்ற ஆண்களிடம், அன்பாகப் பேசி பிரச்சினைக்கு வழிவகுக்கலாம். சாமவேத தான தண்டம். அதாவது இசைவாய்ப் போய்த்தான் நாங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். அடுத்த வேதம் கடைசி முறை தான் தண்டம். தண்டத்திற்கு நான் போவதை விரும்பவில்லை.

பெண்களுக்கு எதிரி பெண்கள் தான் நல்ல புடவைகட்டிக் கொண்டு போனாலும் பெண்கள்தான் கதைப்பார்கள். கணவரை இழந்த பெண்கள்பற்றி பெண்கள் தான் கதைப்பார்கள். அப்படி என்ன விடயமென்றாலும், பெண்களுக்குப் பெண்கள் தான் எதிரி.

பல்கலைக்கழகத்தினுள்ளும்கூட சிறந்த முறையில் விளங்கிக்கொள்கின்ற தன்மை இருக்கின்றதா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. பணம்தேடவும், பட்டம் பெறவும் தான் ஓடுகிறார்கள். முதலில் தன்னைத்தானே தேடவேண்டும்.

உண்மையில் மனிதநேயம் என்பது கற்பனையில்தான் இருந்துவருகின்றது என்று ஆதங்கத்துடன் முடித்தார்.

நேர்காணல் -
பூ.நகுலன், செல்வா

பெண்களை தூண்டி!

பாதங்களைக் கவனியுங்கள்

ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை கண்ணாடி முன்நின்று அழகு பார்க்கும் பெண்கள் ஏன், ஆண்களும்தான் தமது கால்களையும், பாதங்களையும் பராமரிப்பதில் போதிய கவனம் செலுத்துவதில்லை. இதற்குக் காரணம் - பாதங்கள் தானே என்ற அலட்சியம். உடலில் நரம்புகள் முடிவுக்கு வரும் இடம் பாதங்களே. எனவே, அழகுக்கென்று இல்லாவிட்டாலும், ஆரோக்கியத்திற்காவது பாதங்களைப் நீங்கள் பேணிவரவேண்டும்.

கால்களில்தான் அழுக்குப்படிவது அதிகம். காய்ப்பு, பித்தவெடிப்பு, வரண்ட தோற்றம், நகப்பிளவு எனக்கால்களில்வரும் பிரச்சினைகள் அதிகம். வாரத்திற்கு ஒரு தடவையாவது, கால் நலனுக்காக அரை மணித்தியாலத்தை ஒதுக்கவேண்டும்.

கால்களைக் கழுவித் துடைத்து, நகங்களை வட்டவடிவில் வெட்டி சுத்தப்படுத்துங்கள். நகஓரங்களை ஆழமாக வெட்டக்கூடாது. அப்படிவெட்டினால், நகம் மடிந்து உட்புறமாக வளரலாம். அகலமான பாத்திரத்தில், வெதுவெதுப்பான நீரை எடுத்து, அதில் திரவ சோப்பைக் கலந்து, இரண்டு கால்களையும் அதில் 10 நிமிடங்கள் வைத்திருங்கள். பின்னர், பல்துலக்கும் பிரஷைக்கொண்டு, மென்மையாகத் தேய்த்துவிடுங்கள். அதேபோன்று காலின் அடிப்பகுதி மற்றும் மேற்பகுதியையும் தேய்த்துவிடுங்கள். அழுக்குகள் எல்லாம் அகன்றுவிடும்.

மேலும் இப்படிச் செய்வதால், காலாணி, பித்தவெடிப்பு போன்ற் பிரச்சினைகள் நாளடைவில் குணப்படும். சுத்தப்படுத்துவதற்கு முன்னர் சொரசொரப்பான சிமெந்துத் தரையில் கால்களைத் தேய்தால்போதும்.

அடுத்ததாக, இதமான மசாஜ். கால்கலில் இரத்த ஓட்டத்தைச் சீராக்க மசாஜ் செய்துகொள்ளவேண்டியது மிகவும் முக்கியம். பின்பு, கால்களை ஈரமில்லாமல் நன்றாகத் துடைத்து, கீழிருந்து மேலாக மசாஜ் செய்யவேண்டும். இதனால், அதிக இரத்த அழுத்தத்துடனும், மேலிருந்து கீழ் செய்யும்போது மென்மையாகவும் இருக்கும்.

இப்படியே 10 நிமிடங்கள் செய்யவும் எல்லாம் முடிந்ததும் வெதுவெதுப்பான நீரில் கால்கலைக் கழுவி, சுத்தம் செய்து ஈரம்போக துடைத்தெடுக்கவும். கடைசியாக அழுக்கு அழகு சேர்க்க நகங்களுக்கு நகப்பூச்சு செய்துகொள்ளுங்கள். உங்கள் தோலின் நிறத்துக்கு பொருத்தமான நகப்பூச்சு காலழகுக்கு மேலும் மெருகூட்டும். நகஇடுக்கில் தூசுகள், மண் துணுக்குக்கள், கிருமிகள் என்று கண்ணுக்குப் புலப்படாத எதுவுமே எழுதில் நுழையமுடியும் என்பதால், நகங்களுக்கு மட்டும் அன்றாடக் கவனிப்புத் தேவை. அதிலும், நகங்களுக்கிடையில், ஈரம் படிந்தாலும்கூட, சுத்தமாகத் துடைத்தெடுக்கவேண்டும். காலுறை பயன்படுத்துபவர்கள், விரல்களுக்கிடையில், சுத்தம் செய்தபிறகு, சிறிது பவுடர் போட்டுக்கொள்வது நல்லது. நேரம் கிடைக்கும்போது, கால்களுக்கு மசாஜ் செய்வது மிகவும் நல்லது.

ஞாபக சக்திக்கு வல்லாரை

இலங்கையில் காடு மேடுகளில் எல்லாம் காணப்படும் ஒரு தாவரமே வல்லாரை. உண்மையில் துவர்ப்புச் சுவைகொண்ட வல்லாரை - ஒரு மருத்துவ மூலிகை. ஈரலிப்பான நிலத்தில் வேகமாகப் படர்ந்து வளரக்கூடியது வல்லாரை. இலங்கையில் மலைப்பாங்கான பகுதிகளில், குறிப்பாக இறப்பர் தோட்டங்களில் செழித்து வளர்கிறது. இதன் இலை முதல் தண்டு வரையில் அத்தனையும் பயனுள்ளதே. 'நிரம்பிராமி' என வடமொழியில் அழைக்கப்படும் வல்லாரையை, போதுமானளவில் கிடைப்பதாலும், அதன் சுவை காரணமாகவும் சிலர் இந்தக் கீரையை விரும்புவதில்லை.

ஆனால், இதன் மருத்துவ குணம் காரணமாக வல்லாரை இன்று பெரிய இடத்து உணவாக, கௌரவம் பெற்றுள்ளது. வல்லாரை இலைக்கஞ்சி இலங்கையில் பிரசித்திபெற்ற உணவாகும். வல்லாரையைச் சாடிகளில் வளர்த்து விற்பனை செய்யும் அளவிற்கு இன்று இந்தக் கீரை பிரசித்தி பெற்றுள்ளது. வல்லாரைச்சாறு பல ஆயுர்வேத மருந்துகளில் பயன்படுத்தப்படுகிறது. மசாஜ் செய்ய உபயோகிக்கப்படும் எண்ணெயில், வல்லைரைச் சாறு கலக்கப்படுகிறது. வலிப்பு, நரம்பு நோய், உளவியல் நோய்கள் போன்ற வற்றுக்கு ஆயுர்வேத வைத்தியர்கள் வல்லாரைசாற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆஸ்துமாநோய்க்கு நிவாரணியாகப் பயன்படுத்தப்படும் வல்லாரை - இருதய நோய்க்கு மருந்தாகவும், வைத்தியர்களினால் பயன்படுத்தப்படுகிறது. மன உளைச்சலுக்கும் இது நல்ல மருந்தாகும். இதன் இலைகள் உலர்த்தப்பட்டு, தூளாக்கி பாலில் கலந்து தினம்தோறும் குடித்து வந்தால், ஞாபகசக்தி அதிகரிக்கும். அதைவிட நரம்புகள் சாந்தம் அடைவதனால், மனத்தளர்ச்சி குறையும் என்றும் கூறப்படுகிறது. வயிற்றுப்போக்கு, தொண்டை அழற்சி போன்றவற்றுக்கு வல்லாரை நிவாரணியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

வல்லாரையைச் சமைத்து உண்ணாமல் பச்சையாகவே உண்ணலாம்.

பிஞ்சுமுகத்தின் தேடல்

இன்று வெள்ளிக்கிழமை. விடியற்காலையில் என்னை தட்டியெழுப்பும் பிள்ளையார் கோயில் மணியோசை காதில் விழுகிறது. இனிமேலும் தூங்கமுடியாது. எழுந்து பாயில் இருந்துகொண்டே என் பார்வையை சுழலவிடுகின்றேன். முற்றத்தில் அப்பம்மா கைகூப்பி கண்மூடி நிற்கின்றா. அவவின் வெள்ளைப் புடவை என் பார்வையில் படுகின்றது. இது வழக்கமாக நான் காலையில் கண்விழிக்கும் போது காணும் காட்சி. திடீரென இரவு அப்பம்மா சொன்னது நினைவுக்கு வருகிறது.

"என்ரை இரண்டு குஞ்சுகளுக்குக் கடவுள் நல்ல வழிகாட்டிவிட்டார். எனக்கு இனி கொஞ்சம் நிம்மதி. அப்பனே பிள்ளையார் அப்பா நீதான் இனி என்ரை குஞ்சுகளுக்குத் துணை!"

அப்பம்மாவின் வாய் பேசிக்கொண்டிருக்க, கண்களிலிருந்து கண்ணீர் வடிகின்றது. எனக்கு நெஞ்சுக்குள் என்னவோ செய்கின்றது. அப்பம்மா எப்போதும் இப்படித்தான். 'என்ரை குஞ்சுகள்' என்று தொடங்கினாள் அழுகையில்தான் முடிப்பார். எனக்கும், அண்ணாவிற்கும், அக்காவிற்கும் கையிலே பழைய சோற்றை உருட்டித்தரும்போது, அவர் கண்களிலிருந்து கண்ணீர் துளி உருண்டோடி வரும். ஒருநாள் நான் அப்பம்மா கையில் [illegible] கவளத்தை அவர் வாயிலேயே திணித்து 'அப்பம்மா உனக்கும் பசிக்கும் சாப்பிடணை! என்று சொன்னேன்.

"இல்லை மோனே! எனக்குப்பசியில்லை! என்ரை செல்லக்குஞ்சுவின்ரை அம்மாவை நினைத்துப்போட்டேன். அழுகை வந்துவிட்டது" என்னைக் கட்டியணைத்து அப்பம்மா முத்தமிட்டால். அவர் வாயில் வெற்றிலைச் சாறு - என்னுடைய சிவந்த கன்னத்தில் படிய, நான் அருவருப்போடு அவர் அணைப்பிலிருந்து திமிறி வெளியேற, அண்ணாவுக்கும் அக்காவுக்கும் சிரிப்பு வந்தது. எல்லோரும் சிரித்தோம்.'

அதுபோகட்டும், பாயைச் சுருட்டிவைத்துவிட்டு உமிக்கரியிருக்கும் சிரட்டையைத்தேடி நடந்தேன். அப்பம்மா கைவிளக்குமாற்றால் முற்றத்தைக் கூட்டிக்கொண்டிருந்தார், பல் [illegible]த்துலக்கியபடி திண்ணையிலே சுருண்டு [illegible]த்திருக்கும் அப்பாவைப் பார்க்கிறேன். இப்[illegible]தோதுதான் நன்றாகத் தூங்குகின்றார். இரவு முழுவதும் இருமிக்கொண்டிருப்பார். ஏதோ இழுப்புவியாதி என்று சொல்லுவார். இந்த வியாதி அண்ணாவுக்கும் அக்காவுக்கும்கூட [illegible]டக்கிடை வரும். பனிக்காலம் வந்து [illegible]டால்போதும் - உடனே அது ஓடிவந்து அண்ணாவையும் அக்காவையும் பற்றிக்கொள்ளும். நல்லவேளை அது என்னிடம் வருவதில்லை. நான் மட்டும்தான் விடியற்காலையில் எழுந்து குளித்துவிட்டு, அப்பம்மாவுடன் திருவெம்பாப்பூசைக்குப் போவேன். பிள்ளையார் கோயிலில் அவ்வளவு சனம் வராது. எல்லாமாகப் பத்துப்பேர். எனக்கு பத்துவரைக்கும் தான் எண்ணத்தெரியும். சிலவேளை கூட வந்தால் இன்னொருமுறை எண்ணிப்பார்ப்பேன். ஐந்து அல்லது ஆறுவரைதான் வந்திருக்கும். திருவெம்பாவைப் பாட்டுக்கேட்க எனக்கு நல்லவிருப்பம். ஒவ்வொரு பாட்டும் முடிய சின்ன மணிகள் ஆட்டி ஒலியெழுப்பும். அந்தவேலை எனக்குத்தான். மணிகொஞ்சம் உயரத்தில் கட்டிவிட்டார்கள் பரவாயில்லை. நான் உண்டியல் பெட்டியில் ஏறிநின்று மணிகளை அசைப்பேன். அந்த ஒலி தொடங்கி முடியும்வரை அப்பம்மா என்னைப் பார்த்துக் கொண்டிருப்பார். அவாவுக்கு நான் விழுந்துவிடுவேனோ என்று பயம். எனக்குப் பயம் இல்லை. பிள்ளையார் அப்பா என்னை விழுத்த மாட்டார். எனக்கு அவரிலே நல்ல நம்பிக்கை. எனக்கு நிறைய பிரசாதம் கிடைக்கும். அப்பம்மாவின் மடியில் கட்டிக்கொண்டு வீட்டுக்கு வருவோன். அண்ணாவும், அக்காவும் ஆவலோடு படலையில் காத்திருப்பார்கள். எல்லோரையும் சப்பாணி கொட்டி இருக்கச் சொல்லிவிட்டு, பிரசாதம் கொடுப்பேன். அப்பா கோடாலியோடு நின்று என்னையே பார்த்துக்கொண்டிருப்பார். அப்பம்மா சொல்வா -

'அந்தப் போக்கறுவாளைப்போலவே இருக்கிறாள்'. இந்தப் 'போக்கறுவாள்' யாரென்று தெரியுமா? அவள் என்னுடைய அம்மாவாம். என்னைப் பெற்ற வீட்டுக்குள்ளை செத்துப் போனராம். அவர் எப்படி இருப்பார்? நான் அடிக்கடி யோசிப்பேன். எங்கடை குடிலுக்கை அம்மாவின்ரை படம் இல்லை. ஆனால், கள்ளிப்பெட்டியுக்கை - உரைப்பையுக்க அம்மாவின்ரை கூறைப்புடவை கிடக்கு. ஒருநாள் அப்பம்மா வெங்காயத் தோட்டத்திலை புல்லுப்புடுங்கப்போட்டா, அப்பா விறகு கொத்தப் போட்டார், அண்ணாவும் கிட்டியடிக்கப்போட்டான். நல்ல மத்தியானநேரம். எனக்கும் அக்காவுக்கும் அகோரப்பசி. சாப்பிட ஏதாவது கிடைக்குமா எனக் கள்ளிப்பெட்டியைத் திறந்து பாத்தோம். உரைப்பையில் ஏதோ சுற்றிக் கிடந்தது. சந்திக்கடையிலே இருக்கும் விசுக்கோத்துப் பெட்டிபோல இருந்தது. எடுத்து மளமளவென்று பிரித்துப்பார்த்தோம். வடிவான சிவப்புப்பட்டுச்சேலை. பொன்னிறத்தில் மாம்பழம் பதித்துக்கிடந்தது. சேலையைத் தடவிப்பார்த்தோம். நல்ல வழுவழுப்பாகப் புதுவாசம் வீசியது. நீட்டுச்சேலை. பாயை விரித்துவிட்டு ஒவ்வொரு பக்கத் தலைப்பாக அக்காவும் நானும் அதை உடம்பிலே சுற்றிக் கொண்டபோது, பசி பறந்து விட்டது. அம்மாடி என்ன சுகம்! என்ன மனம்! புடவையே இப்படியெண்டால், அம்மா எப்படி இருப்பாள். இரண்டு பேரும் புடவையைச் சுற்றியபடி பாயிலே படுத்துத்துத் தூங்கிவிட்டோம். இந்த நினைவு ஏன் இப்பவருகுது. முகத்தைக் கழுவப்போனேன். அப்பம்மா முற்றம்கூட்டி முடித்துத் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தார்.

அண்ணாவையும் அக்காவையும் இன்றைக்கு இல்லத்திலே விடப்போவதாக அப்பம்மா இரவு சொன்னதும், இருவரையும் கட்டியணைதது அழுதது நினைவுக்கு வருகிறது.

"இல்லம் தூரத்திலே இருக்குதாம். பல பிள்ளைகள் அங்கே இருக்கினமாம். சாப்பாடும் மூன்று நேரம் கிடைக்குமாம். உடுபுடவை, படிப்புச் செலவு, வைத்திய செலவு எல்லாம் அவையல் பார்ப்பினமாம்."

அப்பாவும், அப்பம்மாவும் கடந்த சில நாட்களாகப் பேசிய செய்திகள் நானும் காதுக்கை போட்டு வைச்சிருக்கிறன். ஆனால், என்னைச் சேர்க்க ஏலாதாம். பிள்ளையார் அப்பா என்ர வயதையும் கெதியாக் கூட்டிவிடப்பா. என் வாய் முணுமுணுக்கிறது.

அப்பம்மா என்னைக் கூப்பிடுறா. "ஏழுமணி பஸ்ஸுக்குப் போகவேணும். கெதியா வாமோனை." நான் என்னட்டை இருக்கிற மூன்று சட்டைகளில் ஒன்றை எடுத்தேன். சீ, சரியான ஊத்தை. மற்றையது சரியா நரைச்சுப் போச்சு, மற்றது கொஞ்சம் பரவாயில்லை. ஐயோ முதுகுப் பக்கம் கிழிஞ்சுகிடக்கு. எனக்கு அழுகை வருகிறது. சட்டையுடன் அப்பம்மாவிடம் போகிறேன்.

அப்பம்மா சட்டை கிழிஞ்சுகிடக்கு. கண்ணில் முட்டிவரும் கண்ணீரைக் கஷ்டப்பட்டு அடக்கமுயல்கின்றேன் - முடியவில்லை. அண்ணன் புது நீலக் காற்சட்டை, வெள்ளைச் சேட்டுப் போட்டு வடிவாக நிற்கிறான். அக்காவும் வெள்ளைச் சட்டையுடன் சிரித்துக் கொண்டு நிற்கிறாள். எனக்கு...! அப்பம்மா மடியில் கட்டியதை அவிட்டுத் தருகிறாள். புதுச்சட்டை! சிவப்பு நிறம், வழுவழுப்பான சட்டை, மாம்பழம் பொன்நிறத்தில். எட அந்த அம்மாவின் கூறைப்புடைவை. அப்பம்மா சட்டையை எனக்குப் போட்டுக்கொண்டே சொல்கிறாள்.

உனக்குச் சட்டை, அக்காவுக்கு பாவாடை என்று தச்சுப்போட்டன். மிச்சம் இன்னும் கிடக்கு. நல்ல வடிவாய் இருக்கு என்ர குஞ்சுக்கு.

அப்பம்மா எனக்கும் அக்காவுக்கும் கறுத்தப் பொட்டு வைக்கிறாள். என் கன்னத்தில் ஒரு பொட்டு வைக்கிறாள். நெட்டி முறித்து நாவுறு கழிக்கிறாள். அப்பா வருகிறார் கையில் கோடாலி இல்லை.

பஸ்ஸுக்காகக் காத்து நின்றபோது, முன் கடையில் ஒரு பெரிய நிலைக் கண்ணாடி. மூவரும் நிரையாக நின்று பார்க்கிறோம். நல்ல வடிவாய் இருக்கு. அந்தப் படத்தை மூவருமே மனதில் பதித்துக் கொண்டோம். அப்பம்மாவின் முகத்தைப் பார்க்கிறேன். அவள் கண்களில் இன்னும் கண்ணீர்த்துளி நிற்கிறது.

அப்பம்மா அங்க பஸ் வருகுதணை! நான் கத்துகிறேன்.

மனோன்மணி சண்முகதாஸ்.

புட்டிப்பால் குழந்தையும் புத்திசாலிதான்!

தாய்ப்பால் என்பது ஒவ்வொரு குழந்தையின் பிறப்புரிமை என்பது முற்றிலும் உண்மை. பேறுகாலத்திலேயே, என்னால் என் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க முடியும்' என்று மனதளவில் தயார்ப்படுத்திக்கொள்வது ஒவ்வொரு தாயின் கடமையாகும்.

தாயாக என்னுடைய பத்து வருட அனுபவத்தில் மிக நெருங்கிய பந்தங்கள்மூலம் தெரிந்துகொண்டது...

சில தாய்மார்கள் தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் தாய்ப்பால் கொடுக்கமுடியாமல், பிறந்த முதல் நாள்முதல், புட்டிப்பால் கொடுத்து வளர்ந்த குழந்தைகள் மிக ஆரோக்கியமாக, மிக்க அறிவுடையவர்களாக வலம் வருதைக் காண்கிறோம்.

இந்தக் குழந்தைகளும் தெளிந்த சிந்தனையுடைவர்களாகவும், பெற்றோர்மீது மரியாதையும், அன்பும் உடையவர்களாகவும் திகழ்வதை நிதர்சனமாகப் பார்க்கிறோம்.

உதாரணமாக எம்.பி.ஏ. படிப்பிற்கு சேர்ந்த தன் தாய்க்கு எல்லாவிதத்திலும், (வீட்டுப்பராமரிப்பிலும், தம்பியைக் கவனித்துக்கொள்வதிலும்) உதவி புரிந்து உறுதுணையாக நின்ற பதிமூன்று வயது புத்திசாலிப் பையன், புட்டிப்பால் குடித்து வளர்ந்தவன்தான்.

அன்பு, மரியாதை, நல்ல குணங்கள் - இவற்றிற்குச் சூழலும், பெற்றோரின் நடவடிக்கைகளும், பெரியவர்களின் வழிகாட்டலுமே காரணம் என்பதை நாம் மறக்கக்கூடாது.

என் நெருங்கிய தோழியும், இன்னும் சில பேர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள் - 'தாய்ப்பால் குடித்து வளர்ந்த முதல் குழந்தைக்குக்கு இழுப்பும் (பரம்பரை), சில காரணங்களால் புட்டிப்பால் கொடுக்கப்பட்டு வளர்ந்த இரண்டாவது குழந்தைக்கு அந்தப் பிரச்சினை வராததும் சில கேள்விகளை எழுப்புகிறதே' என்பதுதான் அது.

மிக முக்கியமானது - சமீபத்தில், தாய்ப்பால் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துள்ளநிலையில், நவநாகரிகமான பெண்கூட, தன் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டுமென ஆத்மார்த்தமாக நினைக்கிறாள். ஆனால், சில சந்தர்ப்பங்களில் அறியாமை காரணமாகவோ, வேறு சில காரணங்களுக்காகவோ தாய்ப்பால் கொடுக்கமுடியாமல் போகும்போது, அவர்கள் 'குற்ற உணர்ச்சிக்கு ஆளாகிறார்கள். இது பின்னர் மன உளைச்சலாகவும் மாறுகிறது. குடும்பம், வேலை என்று பல்வேறு பாரங்கள் சுமக்கும் அவர்களால், நிம்மதியாகச் செயற்படமுடிவதில்லை. இது மிகவும் தவறான தல்லவா?

புட்டிப்பால் குடித்து நல்லமுறையில் வளர்ந்தவர்கள் பலர் இருக்க, தாய்ப்பால் கொடுக்க இயலாத இளம் தாய்மார்கள் சரியான தகவல்களின்றி குற்ற உணர்ச்சிக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாவதைத் தடுக்கவேண்டிய அனுபவமிக்க தாய்மார்களுடைய கடமையல்லவா.

பெண்களை, தாய்மைப் பேறுக்கு என்று மட்டுமே தயார் செய்த அந்தக் காலத்தில்வேண்டுமானால் தாய்ப்பால் பற்றிய கருத்துக்கள் சரியாக இருக்கலாம். ஆனால் படிப்பு, வீட்டுவேலை, தொழிலென்று உடம்மை வருத்திக்கொண்ட இன்றைய பெண்களுக்கு அது பொருந்துமா? என்ற கேள்வியை ஆழ்ந்து நோக்கவேண்டும்.

கட்டாயமாகத் தாய்ப்பால் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயம் செய்துகொண்டதினால், மாற்றுப் பாலைத் தவிர்க்க நினைத்ததில் மூன்று மாதத்திற்குப் பின் இணை உணவு ஆரம்பித்த பிறகும், குழந்தை அழுவதும், குறைந்த இடைவெளியில் (தாய்ப்பால்) கொடுக்கச் செய்வதும் ஒரு சாதாரண நிகழ்வாக இருக்கிறது.

தாய்மார்கள், தாய்ப்பால் கொடுக்கவேண்டும் என்ற விடயத்தை மட்டுமே கிரக்கித்துக்கொண்டுள்ளார்களே தவிர, அதற்கு நல்ல சத்துள்ள உணவை உட்கொள்ளவேண்டும் என்ற விடயத்தைக் கிரகித்துக்கொள்வதில்லை.

தாய்ப்பால் கொடுக்க நினைக்கும் இளம் தாய்மார்கள் - சத்துள்ள உணவு உண்பது மட்டுமல்ல, தேவையான ஓய்வும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

கூட்டுக்குடும்பம் அரிதான இந்தக் காலத்தில், எங்கே அந்த ஓய்வு கிடைக்கிறது. இதர சுமைகள் அழுத்துகிறநிலையில் எட்டு, ஒன்பது மாதக் குழந்தை தாய்ப்பாலுக்காக நச்சரிக்கும்போது, தொடக்கத்தில் ஆத்மார்த்தமான விருப்பத்துடன் கொடுத்து வந்த செயலானது, பிறகு ஒரு கட்டாயத்தின் பேரில் ஒரு தண்டனைபோல ஆகிவிடுகிறது.

இதையும் நாம் ஆராய்ந்து மனதில் கொள்ளவேண்டும். தாய்ப்பாலை ஆதரிப்பவள் என்ற அடிப்படையில் சில அறிவுரைகள் -

1. ரவையை நெய்யில் வறுத்து நீரில் வேகவைத்து - பால், சீனி, சேர்ந்த மோர், உப்பு சேர்த்தோ காலை உணவாக எடுத்துக்கொண்டால் தாய்ப்பால் நன்கு ஊறும்.

2. வெந்தய தோசை செய்து சாப்பிட்டாலும் பால் ஊற உதவும்.

3. கோதுமை மாவை நெய்யில் சிவக்க வறுக்கவும். முந்திரிப் பருப்பு, திராட்சை இவைகளைப் பொடியாக நறுக்கி நெய்யில் வறுத்துமாவில் சேர்க்கவும். சீனியை இதனுடன் சேர்த்து, லட்டுகளாகப் பிடித்து வைத்துக்கொண்டு, குழந்தை பிறந்த பதினொரு நாள் கழித்து காலையில் இரண்டு லட்டுகள் சாப்பிட்டுவர பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு போஷாக்குக் கிடைக்கும்.

காலம் மாறிவிட்டதே என்று சோர்ந்து போகாமல், பேறு காலத்தின்போதே கணவருடன் பேசி தாய்ப்பால் கொடுக்கும் வரையிலும் எளிமையான சமையலையும், வீட்டு வேலைகளில் உதவ ஒரு உதவி ஆளையும் வைத்துக்கொள்ளலாம். புதிய உணவு வகைகள் செய்வது, விருந்துபசாரங்கள் எல்லாம் குழந்தை பெரிதாகும்வரை தள்ளிப்போடுங்கள்.

உங்களைப் போன்ற இளம்தாய்மார்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள். ஒப்பிடுதல் மட்டும் வேண்டாம். இறுதியாக, ஆனால் முக்கியமாக, சொல்லிக் கொள்வது - தாய்ப்பால் கொடுக்க இயலாத இளம் தாய்மார்கள் எவ்வித குற்ற உணர்ச்சியும் இல்லாமல், அன்புடனும், அரவணைப்புடனும், சத்தான, சுகாதாரமான மாற்றப் பால் கொடுப்பதன்மூலம், குழந்தைகளுக்கு நல்ல சூழலை உருவாக்கிக்கொடுங்கள்.

உங்கள் குழந்தைகளும் நல்லவர்களாக, வல்லவர்களாகத் திகழ்வார்கள்.

இந்த வார பலன்கள்

13.02.2004 - 19.02.2004 (திருக்கணிதம்)

சுக்	செவ் ராகு		சனி
யுரே	13 ப 1.12 கும் - சூரி 13 இ 7.11 விரு - சந் 15 இ 10.02 தனு - சந்		
சூ.புத நெப்	17 இ 12.15 மக - சந் 19 பி.இ. 2.39 கும் - சந்		குரு
		கேது, சந்	

மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் தொழில் ஓரளவு நன்றாக அமையும். தேவைக்கேற்ப பணவரவு இருக்கும். குடும்பத்தில் கணவன்-மனைவி உறவு மகிழ்ச்சி தரும். பிள்ளைகளாலும், நண்பர்களாலும் நன்மையான பலன்கள் உண்டாகும். பெண்கள் குடும்பத்தில் மனத்திருப்தி உடையவர்களாகக் காணப்படுவா. பலருக்குச் சுபகாரிய நிகழ்வுகள் நிச்சயிக்கப்படலாம். தூரதேசப் பிரயாணங்கள் மேற்கொள்வோருக்கு அனுகூலமான பலன் கிடைக்கும். தேகசௌக்கியம் முதலியன பாதிப்பில்லாமல் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு திருப்தியாக வேலைகள் அமையும். பக்க வருவாய்களும் கிடைக்கும். அதிகாரிகளுடன் நட்பு வளரும். வர்த்தகர்களுக்கு பல நன்மைகள் ஏற்படும். புதிய வாடிக்கையாளர் அமைவார்கள். சிறந்த இலாபத்தைப் பெறுவர். மாணவர்கள் கல்வியில் ஆர்வமுடையவர்களாக இருப்பர். பரீட்சைப் பெறுபேறுகள் நன்கு அமையும்.

இடபம்

(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)

இவ்வாரம் இவர்களுக்கு நன்மை தீமை கலந்த பலன்கள் காட்டும். தொழிற்துறையில் பிரயாசை அதிகமாகும். குடும்பத்தில் அதிருப்தி நிலவும். பிள்ளைகள், மனைவி இவர்களால் தேவையற்ற செலவுகள் காணும். இனத்தவர்கள், அயலவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நடக்கமாட்டார்கள். குடும்பப் பெண்கள் மத்தியில் அமைதி குன்றும். கொடுக்கல், வாங்கல்கள் கஷ்டங்களும் தலைதூக்கும். திருமண நிகழ்வுகள் இழுபறிநிலையிலேயே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைபபழு அதிகமாகும். அதிகாரிகளின் சீறல்களுக்கு ஆளாகாமல் நடத்தல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும். கொடுக்கல், வாங்கல் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். போட்டி, பொறாமை முன்நிற்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைவாக இருக்கும். மறதி ஏற்படலாம்.

மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)

இந்த ராசியில் பிறந்தவர்களுக்குப் பொதுவாக நன்று. குடும்பஸ்தவர்கள் அதையாக வாழ்வார்கள். தொழிற்துறை நன்றாக அமையும். தொடங்கும் கருமங்கள் சற்றுத் தாமதமடையும். எனினும், இறுதிமுடிவு நன்றாக இருக்கும். உறவினர்களால் இடையூறுகள் ஏற்படலாம். குடும்பப் பெண்கள் மனதைக் குழப்பிக்கொள்வார்கள். பண விடயங்களில் அவதானம் தேவை. வீண்விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்கள் மிகுந்த நிதானத்துடன் செயற்படவேண்டும். அதிகாரிகளை அனுசரித்துப்போவது நன்று. வியாபாரிகளுக்கு முதல் வீணாக முடங்கிக்கொண்டிருக்கும். மாணவர்களுக்கு ஓரளவு முன்னேற்றமுண்டு.

கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

கடகராசியினருக்கு இவ்வாரம் பலவகையாலும் நற்பலன்கள் காட்டுகின்றன. தொழில், வருவாய் என்பன திருப்தியாக நடைபெறும். குடும்பஸ்தர்களுக்குத் திருப்தியான வாழ்க்கை அமையும். புத்திரர்களால் நன்மை உண்டு. உறவினர்கள், நண்பர்கள் வீடுதேடி வருவார்கள். தொழில் திட்டங்கள், முயற்சிகள் முதலியவற்றால் நன்மை உண்டு. புதுத்தொழிலை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் நன்மையளிக்கும். இல்லறவாழ்வில் இணையவிரும்புவோருக்குக் கருமம் கைகூடும். புதிதாக உத்தியோகத்தை நாடுவோருக்கும் நன்மையுண்டு. உத்தியோகத்திலிருப்பவர்கள் செம்மையாகப் பணியாற்றி பொதுமக்களாலும், அதிகாரிகளாலும் பாராட்டப்படுவர். வர்த்தகர்கள் வியாபாரத்தில் கூடிய இலாபம் பெறுவர். வாடிக்கையாளர் தொகை அதிகரிக்கும். வங்கி நிலை நன்று. மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். சிலருக்குப் பரிசில்கள் கிடைக்கலாம்.

சிங்கம்

(மகம, பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

இவர்களுக்கு இவ்வாரம் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும். நல்லிணக்கம் காணப்படும். எனினும், பொருளாதார விடயத்தில் சிறப்புகள் குறைவாகவே இருக்கும். பிரயாசை அதிகமாகும். தொடங்கும கருமங்கள் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். பிள்ளைகளால் பலவிதநன்மை ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் இழுபறியின் மேல் நன்மைதரும். தூரதேசப் பிரயாணங்கள் கைகூட வாய்ப்புக்கள் தென்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு இருப்பினும், சாமர்த்தியத்தால் சிறப்பாகச் செயலாற்றி நன்மை பெறுவர். சக பணியாளர்களால் உதவியுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். நிறைந்த இலாபம் கிடைக்கும். புதிய முதலீடுகள் சிறப்பைத்தரும். தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்துவர். பலருக்கு மேற்படிப்புக்கான வசதி கிடைக்கும்.

கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)

கன்னிராசிக்காரருக்கு இவ்வாரம் குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். எப்போதும் பொருளாதாரப் பற்றாக்குறை இருந்துகொண்டிருக்கும். குடும்பப் பெண்கள் மனதில் நிம்மதியின்மை காட்டும். தொழிற்துறையில் அலைச்சல், சிரமங்கள் தோன்றும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினை உருவாகும். தேவையில்லாத பிணக்குகள் வந்துசேரும். வீண் வாக்குவாதங்களும் ஏற்படும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். திருமணப் பேச்சுக்கள் காலந்தள்ளிக்கொண்டு போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு கூடுதலாகும். பக்கபலம், பாராட்டு என்பன எதிர்பார்க்கமுடியாது. வியாபாரிகளுக்குள் போட்டி, பொறாமை கூடுதலாக இருக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடையாது. மாணவர்கள் முயற்சிக்கேற்ப நற்பலன் காண்பர். சிலருக்கு உயர்கல்வி வாய்ப்புகிடைக்கும்.

துலாம்

(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)

இவ்வாரம் உங்களுக்குத் தொழிலில் பிரயாசை, அலைச்சல், அசௌகரியம் இருந்துகொண்டிருக்கும். பணவசதி ஓரளவு இருப்பினும், முக்கிய தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தத்தளிக்கநேரும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை தோன்றும். எக்கருமத்தையும் முன்னெடுத்துச் செல்வது கடினம். எந்த விடயத்திலும் ஆர்வம் குறைந்து காணும். திருமணப் பேச்சுக்கள் இழுபறிப்பட்டு, இறுதியில் நிறைவுபெறும். பிள்ளைகளாலும் தொல்லைகள் தோன்றும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை. இடையிடையே பிரயாணங்களிலும் அலைச்சலும் செலவும் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாயினும், சகதொழிலாளர்மூலம் உதவி கிடைப்பதால், நிறைவேற்றமுடியும். வியாபாரிகளுக்குச் சரக்குகளை விற்பனையாக்குவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படும். எதிர்பார்த்த இலாபம் கிடையாது. மாணவர்கள் பாடங்களில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

இந்த இராசியினருக்கு இவ்வாரம் நற்பலன்கள் மிகக்குறைவு. குடும்பத்தவர்களுக்கு இருப்பிடத்தில் அசௌகரியம், உறவினர்களின் உபத்திரவங்கள் என்பன இருக்கும். பணச்செலவு வருவாயிலும் பார்க்கச் செலவுகள் கூடுதலாகக் காட்டும். குடும்பப் பெண்கள் மனவிரக்தியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் காலந்தள்ளிப்போகும். இருப்பிட மாற்றங்களும் ஏற்படலாம். தூரதேசப் பிரயாணங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்கள் பிறர் பணிகளையும் ஏற்றுச்செய்ய நிர்ப்பந்திக்கப்படுவர். இதனால், உரியநேரத்தில் பணிகளைச் செய்து முடிக்கமுடியாமல் கஷ்டப்படுவர். வியாபாரிகளுக்கு அரசாங்கக் கெடுபிடிகள் கவலையைத்தரும். இரும்பு வியாபாரம் செய்வோர் கூடிய இலாபம் பெறுவர். மாணவர்கள் அசமந்தப் போக்குடையவர்களாக இருப்பர்.

தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

இவர்களுக்கு இந்த வாரம் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். தொழில்களால் போதிய வருவாய் கிடைக்கும். குடும்பத்தில் நன்மதிப்பும், உறவினர் வருகையாலும் வீட்டில் குதூகலமும், மகிழ்ச்சியும் ஏற்படும். சுபநிகழ்வுகள் நடைபெறும். நினைத்த கருமங்கள் உடனுக்குடன் அனுகூலமாகும். தேவைக்கேற்ப பணவரவு கிட்டும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மணவாழ்க்கையை விரும்புவோருக்கு கருமம் அனுகூலமாகும். சிறப்பான வாழ்க்கையும் மனச் சந்தோஷமும் ஏற்படலாகும். உத்தியோகத்தர்களுக்கு சகஜமான சூழ்நிலை காணப்படும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு, அதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கும். பலராலும் மதிக்கப்படுவர். வியாபாரிகளுக்கு அமோக இலாபம் கிடைக்கும். அதிகமான வாடிக்கையாளர் சேர்வார்கள். புதிய முதலீடுகளும் வெற்றியைத்தரும். மாணவர்கள் முயற்சியுடையவர்களாக இருப்பர். பரீட்சைகளில் சித்தியும், பாராட்டும் பெறுவர்.

மகரம்

(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)

மகரராசியினருக்கு இருப்பிடத்தில் அசௌகரியங்கள் ஏற்படும். உறவினர்களிடையே பகை உணர்வு தென்படும். தொழிலில் பெரிய சிரமத்தின்மேல் பண வருவாய் கிடைக்கும். குடும்பத்திலும் கருத்து வேற்றுமைகள் தென்படும். உறவினர்கள் தொல்லைகொடுப்பார்கள். குடும்பப் பெண்கள் மனச்சஞ்சலமுடையவர்களாகக் காணப்படுவர். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். இதனால், வைத்தியச் செலவும் அதிகரிக்கும். கடன், பகை, போட்டிகள் புதிதாக உருவாகலாம். உத்தியோகத்தர்கள் மிகவும் சிரமப்படவேண்டியிருக்கும். வசதி குறைந்த இட மாற்றங்களால் கஷ்டம் அடைவர். வேலைப் பழுவும் அதிகமாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். பணம் சேராது. மாணவர்கள். ஆசிரியர் உறவு பாதிக்கப்படலாம். பரீட்சைகள் திருப்தியான முடிவைத்தராது.

கும்பம்

(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அடிக்கடி விருந்துபசாரங்கள் நடக்கும். பலரின் வருகையால், வீடு கலகலப்பாக இருக்கும். செலவுகளும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். பலவகையாலும் வருவாய் வந்துசேரும். கணவன், மனைவி உறவு சுமுகமாக அமையும். பிள்ளைகள் பலவகையாலும் உதவுவார்கள். குடும்பப் பெண்கள் நிதானம், சிக்கனம், பொறுமை என்பவற்றைக் கடைப்பிடித்தல் நன்று. பொதுவாகத் தொழிலில் மற்றவர்களின் தலையீடுகளால் உபத்திரவம் இருக்கும். திருமணப் பேச்சு இழுபறியாகவே இருக்கும். உத்தியோகத்தர்களுக்குத் தொழிலில் அக்கறை கூடுதலாக இருப்பினும், அவற்றை சரிவரச் செய்வதில் தாமதம் காணும். வியாபாரம் ஓரளவு நன்றாக நடக்கும். கொடுக்கல், வாங்கல்களில் சிக்கல் ஏற்படாமல் தவிர்த்துக்கொள்வது நன்று. மாணவர்கள் சுறுசுறுப்பாகவும், ஊக்கமுடையவராகவும் காணப்படுவர்.

மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

இவர்களுக்கு இந்தவாரம் நனமை தரும். முன்பு இருந்த கஷ்டங்கள் படிப்படியாக நீங்கும். குடும்பநிலை உற்சாகமாக இருக்கும். உறவினர்கள், நண்பர்கள் உதவ முன்வருவார்கள். வெளியூரிலிருந்து சுபசெய்திகள் வரும். தொழில், வருவாய் என்பன மனத்துக்கு திருப்தியாக அமையும். வருவாயும் அதிகமாக இருப்பினும் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. சிலருக்குப் புதிய தொழில் அமைய வாய்ப்புண்டு. உத்தியோகத்தினர் தமது பணிகளைச் சிறப்பாகச்செய்து பாராட்டைப் பெறுவர். ஊதிய உயர்வும் கிட்டும். வியாபாரத்தில் போட்டி, பொறாமை காரணமாக் இருந்துவந்த சிக்கல்கள் நீங்கும். வங்கி உதவிகள் கிடைக்கலாம். வியாபாரத்தை நன்கு திட்டமிட்டு மேம்படுத்துவது நன்று. மாணவர்கள் கல்வியில் தெளிவும், தேர்ச்சியும் அடைவர். உயர்கல்வி கிடைக்கும்.

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி VII - சிவா

தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

(நேற்றைய தொடர்ச்சி...)

1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு பெண்ணின் படம் அவனுக்கு வந்தது.

உயர்தர வகுப்புவரை படித்த அந்தப் பெண்ணின் பெயர் சுமதி என்றும், அவள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றும், அவனது தந்தை எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

சதீஸுக்கு அந்தப் பெண்ணை மிகவும் பிடித்துவிட்டது.

அவளது நிழற்படத்தைப் பார்த்தே அவன் அவளைக் காதலிக்க ஆரம்பித்துவிட்டான்.

தான் அவளுடன் நேரே க்தைகக வேண்டும் என்று அவன் விரும்பினான். இதை இவன் தனது தந்தைக்குச் சொன்னபோது, அவள் யாழ்ப்பாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருப்பதாகவும், விரைவில் கொழும்புக்கு வந்து விடுவாள் என்றும், அதன் பின்பு தினசரி கதைக்கலாம் என்றும் சொல்லி விட்டார்.

1995 ஜனவரிவரை அவள் வருவாள், வருவாள் என்று காத்திருந்தான். அவள் நிழற்படத்தைப் பெரிதாக்கி தனது அறைசுவரில் ஒட்டி வைக்கும் அளவிற்கு அவள்மேல் ஒருதலைப்பட்சமான காதலை அவன வளர்த்துவிட்டான்.

1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி போலின் நகரத்திற்குச் சென்று வந்த சதீஸின் நண்பன் - சுமதி அங்கு வந்திருப்பதாகவும், அவள் தங்கியிருக்கும் வீட்டு முகவரியைத் தான் கண்டுபிடித்து அதனை நம்பாவிட்டாலும், நண்பன் உறுதியாகச் சொன்னதால் - கார் ஒன்றைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு தகவல் தெரிவித்த நண்பனுடன் பேர்லினுக்குச் சென்றிருந்தான்.

பேர்லின் விலங்கியல் பூங்காப் பகுதி தொடர்மாடி ஒன்றிலிருந்த அந்த வீட்டின் அழைப்பு மணியை அழுத்தியபோது, சுமதியே வந்து கதவைத் திறந்தாள். அவள் கழுத்தில் தாலி இருந்தது.

சதீஸ் அதிர்ச்சியடைந்துவிட்டான். கொஞ்சநேரம் அவனால் பேச முடியவில்லை. சுமதிக்கும் முதலில் ஒன்றும் புரியவில்லை.

6 மாதம் கழித்து சதீஸின் தந்தை சீதனத் தொகையை 6 லட்சமாக உயர்த்தியதைத் தொடர்ந்து, சம்பந்தப் பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது.

சுமதிக்கும் வேறு இடத்தில் திருமணம் முடிந்து விட்டது. இந்த விபரங்களைச் சதீஸின் பெற்றோர் அவனுக்குத் தெரியாமல் மறைத்து விட்டனர்.

இந்த விடயங்களைக் கேள்விப்பட்டபோது சதீஸ் அவமானத்தால் கூனிக்குறுகிப்போனான்.

அதற்குள் அவள் கணவன் வந்துவிட, சதீஸுக்கும் அவனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, பின்னர் கைகலப்பில் முடிந்தது.

இறுதியில் காவல்துறையினர் வரவழைக்கப்பட்டு விசாரணை நடந்த போதுதான், ஊரில் நடந்த சம்பவங்கள் சதீஸுக்குத் தெரியவந்தது.

1993 ஆம் ஆண்டு சுமதியைச் சதீஸுக்குப் பெண் பார்த்தபோது, சதீஸின் தந்தை மூன்று லட்சம் ரூபா சீதனமும், 50 பவுண் நகையும் கேட்டிருந்தார். அவர்கள் அதற்குச் சம்மதித்து சுமதியின் படத்தையும் கொடுத்திருந்தார்கள். ஆனால், 6 மாதம் கழித்து சதீஸின் தந்தை சீதனத்தொகையை 6 லட்சமாக உயர்த்தியதைத் தொடர்ந்து, சம்பந்தப் பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது.

சுமதிக்கும் வேறு இடத்தில் திருமணம் முடிந்துவிட்டது. இந்த விபரங்களைச் சதீஸின் பெற்றோர் அவனுக்குத் தெரியாமல் மறைத்து விட்டனர்.

இந்த விடயங்களைக் கேள்விப்பட்டபோது சதீஸ் அவமானத்தால் கூனிக்குறுகிப் போனான் சுமதியிடமும் அவளது கணவரிடமும் காவல்துறை முன்னிலையில் அவன் மன்னிப்புக் கேட்டான். சதீஸுக்குப் பிராங்போட் நகரத்தை விட்டு வெளியே செல்வதற்கான விசா இருக்கவில்லை. (அந்தக் காலத்தில் ஜேர்மன், சுவிஸ போன்ற நாடுகளில் வசிக்கும் அகதிகள் - தாங்கள் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நகரத்தை விட்டு வெளியே செல்லமுடியாது.) காவல் துறையினர் அவனை உடனடியாக பிராங்போட்டுக்குத் திரும்பிச்செல்லும்படி பணித்துவிட்டுச் சென்றனர்.

தனது பெற்றோர் தனக்குச் செய்த துரோகத்தை நினைக்க நினைக்க சதீஸுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவன் அப்படியே மனமுடைந்து போய்விட்டான். அவனது நண்பர்கள் எவ்வளவு ஆறுதல் கூறியும் அவனால் இயல்புநிலைக்கு வரமுடியவில்லை.

1995 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி நண்பர்கள் வேலைக்குச் சென்ற நேரத்திலேயே அவன் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான்.

◆

(தொடரும்....)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

-திருக்குறள்.

நமது நோக்கு

தேர்தலும் வன்முறைகளும்

"யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" ஒரு தமிழ்ப்பழமொழியாகும்.

இதேபோல் தேர்தல் வரும் பின்னே வன்முறைகள் வரும் முன்னே என்பது இன்றைய சமகால - அதாவது தேர்தல் கால புதுமொழியாகும்

இது ஒரு அதீதமான கற்பனையின் பாற்பட்ட புதுமொழி யல்ல. இலங்கையின் கடந்த கால தேர்தல் வரலாறுகள் கற்பித்த அனுபவப்பாடங்களின் மூலம் தெரிந்து கொண்ட உண்மையாகும்.

ஜனநாயக நாடுகள் என்று வர்ணிக்கப்படும் தேசங்களில், தேர்தல்களுக்கும், வன்முறைகளுக்குமான தொடர்பு என்பது எந்தவகையிலும் பிரிக்கமுடியாத ஒன்றாகவே உள்ளது.

இப்படிச் சொல்வதன் மூலம் ஏனையநாடுகளில் தேர்தல் கால வன்முறைகள் இடம் பெறுவது கிடையாது என எவரும் அர்த்தம் கொள்ளக்கூடாது.

ஜனாநாயக அரசியல் நாகரிகம் பற்றிப் பீற்றிக் கொள்ளும் நாடுகளில் வன்முறைகள் தேர்தல் காலப்பண்பாடாக உள்ளது என்றே கூறுகின்றோம்.

ஆசிய நாடுகளில் - இந்தியாவிலும், இங்கையிலும் தேர்தல் கள் வன்முறைகள் சார்ந்த ஒன்றாக இருப்பது ஜனநாயக அவலமாகும்.

குறிப்பாக, ஒருகாலத்தில் மிகமிகக் குறைந்த அளவில் வன்முறைகள் தேர்தல்காலத்தில் நடைபெறும் நாடாக விளங் கிய இலங்கை, 1960களின் பின்னர் நடைபெற்ற சகல தேர்தல் களிலும் வன்முறைகளின் வளர்ச்சி வீதம் அதிகரித்து வந்துள்ள நாடாக விளங்குவதற்கு, அரசியலில் ஜனநாயக பண்புகளும், மனிதநேய அணுகுமுறைகளும் குறைந்து, ஆதிக்க வெறியும், பதவிகளுக்கான போட்டியும், கொள்கை முரண்பாடுகளைத், தனமனித பகைமையை அதிகரிக்கும் மூன்றாம்தர மனோபாவத் துடன் அணுகும் தன்மையும் மேலோங்கி நிற்பதே காரணமாகும்.

தென்பகுதி அரசியல்வாதிகளிடையே அரசியல் பகைமை என்பது மிகவும் தீவிரமாகவே - மிகவும் அநாகரிகமான முறை யிலேயே - வளர்ந்துவருவதற்கு கடந்த பொதுத்தேர்தலில் நடைபெற்ற சம்பவங்களே சிறந்த ஆதாரபூர்வ சாட்சிகளாகவும்,

கருத்து மற்றும் கொள்கைகளை அடிப்படையாகவைத்து பிரசாரரீதியில் மக்கள் முன்னர், தமது அரசியல் நிலைப்பாட்டை விளக்கி, அவர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் வாக்கு களை பெற்றுக்கொள்ளும் துணிச்சலோ, ஜனநாயகப் பண்போ அற்ற தென்பகுதி அரசியல் தலைமைகளின் கீழான கட்சி வேட்பாளர்களும், அவர்களுக்கு ஆதரவும் அனுசரணையும் வழங்கும் ஏனைய கட்சிகளின் வேட்பாளர்களும், தத்தமக்கு இடையேயான அரசியல் கொள்கைவேறுபாடுகளை, வெறிமிக்க பகையுணர்வுடன் வன்முறைச் செயற்பாடுகளின் மூலம் கடந்த பொதுத்தேர்தலில் எதிர்கொள்ள முயன்றதில் ஏற்பட்ட அனர்த்தங்களால் உண்டான அழிவுகள், இழப்புகள், உயிர்ச் சேதங்கள் மற்றும் உடல் - உடமைச்சேதங்கள் அநேகம்.

இவையாவும் ஜனநாயகப் பாரம்பரியத்தின் பேரால் மேற்கொள்ளப்பட்டதுதான் அவமானகரமான விடயமாகும்.

குறிப்பாக நாட்டை நிறைவேற்று அதிகார வல்லமையுடன் ஆளும் ஜனாதிபதியின் பொ.ஐ.முன்னணியினரும், வன் முறையை அரசியல் பண்பாகவே கொண்ட ஜே.வி.பியினரும், பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினரும் கடந்த தேர்தல் களத்தில் கருத்து முரண்பாட்டை கூப்பாக்கி முனையிலும், கத்திமுனையிலும் தீர்க்க முயன்ற அவலத்தை காவல்நிலையங்களும், நீதிமன்றங்களும் பதிவு செய்தே உள்ளன.

இந்த வன்முறைகளுக்கு காரணமான கும்பல்களை வழிநடத்தியோரில் மிகப் பிரபலமான, அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அவர்களின் புதல்வர்கள் அவர்களின் ஆதர வாளர்களான பிரமுகர்கள் அனைவரும் அடங்குவர். இவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்து வன்முறைச் செயல்களுக்குப் பயன்படுத்தியோரில் பாதாளஉலகக் கும்பலைச் சேர்ந்த வர்கள் முக்கியமானவர்கள்.

உதாரணமாக கடந்த தேர்தலில் உடத்தலவின்னவில் தேர்தலன்று நடைபெற்ற திட்டமிட்ட வன்முறைச் சம்பவத்திற்கு தலைமை வகித்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்கள், முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவரது புதல்வர்களான லோசான் மற்றும் சானுக்க ஆகியோரே, இவர்களுக்கு உதவியாக படைத்தரப்பினரைச் சேர்ந்தவர் களும் அதில் ஆயுதங்களுடன் பங்குகொண்டார்கள் என்பதும் முக்கியமானதாகும்.

இது தென்பகுதி அரசியல் தலைமைகளின் ஜனநாயக விரோதபண்புக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இப்போதும் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வன் முறைகள் மெல்ல மெல்ல ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளன. இது தேர்தல் நெருங்க நெருங்க அதிகரிக்கவே செய்யும், இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரபீடத்தவரே நெறிப்படுத்து வதால் வன்முறை உக்கிரமடைவதை தடுக்க முடியாது என்பதே உண்மை.

வடக்கு - கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் கடந்த தேர்தலின் போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையும் மக்கள் அறிந்தே உள்ளனர். இம்முறை இது குறைந்து விடும் என்று கூறிவிடமுடியாது.

வீல்லனற்ற தமிழ்ப்படம் போன்று வன்முறைகளற்ற தேர்தல் என்பது இலங்கையில் இப்போதைக்கு சாத்தியமே இல்லை போல் தெரிகிறது.

போர்நிறுத்தம் - சமாதானச் சூழல் என பலரும் எண்ணி னாலும், வன்முறைகளைத் தூண்டுவோர் சமாதானத்தை நிரா கரிப்பவர்களாகவும், போரை நேசிப்பவர்களாகவும், பெருமள வில் இருப்பதாலும் அவர்களிடம் அதிகார பலம் மையம் கொண்டி ருப்பதாலும், வன்முறைகளற்ற தேர்தலுக்கான வாய்ப்பே கிடையாது என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

எனவே நேர்மையான தேர்தலுக்கான சாத்தியம் இல்லை என்றே கூறவேண்டும்.

நாடும் நடப்பும்

தனி ஆவர்த்தனம்



அமெரிக்க அதிகாரிகள் குழுவினர் ஒஸ்மானியக் கல்லூரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம்செய்த, அமெரிக்க புனரமைப்பு அதிகாரிகள் குழு ஒஸ்மானியாக் கல்லூரியைப் பார்வையிட்டது.

அமெரிக்க புனரமைப்பு அதிகாரிகளில் ஒருவரான, அசான் பால சேகரா தலைமையிலான இந்தக்குழு, ஒஸ்மானியக் கல்லூரி நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே இங்குவந்து, இந்தக் கல்லூரியைப் பார்வையிட்டனர்.

கல்லூரியின் தற்போதைய மறுசீரமைப்பு, யாழ்.முஸ்லிம் மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக, யாழ். மக்கள் புணி மனை செயலாளர் அமெரிக்க அதிகாரிகளுக்கு கருத்து தெரிவிக்கையில், போர்ச்சூழல் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக இந்தப் பாடசாலை இயங்கமுடியாத நிலையில் இருந்தது.

ஒஸ்மானியாக் கல்லூரி முஸ்லிம் சமூக மாணவர்களின் நலன்கருதி மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற யாழ்.முஸ்லிம் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, மீண்டும் வலயக் கல்விப்பணிப்பாளரின் உதவியுடன் அவர் திறந்து வைத்தார்.

இந்தப் பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று இருந்தது. தேசிய பாடசாலையாக தெரிவுசெய்யப்படுவதற்கு பல வாய்ப்புகள் இருந்தன. ஆனால், இப்போது அதிபரின் அலுவலகம்கூட சீரான நிலையில் இல்லை. நீங்கள் குறைந் தது மூன்று அறைகளையாவது புனரமைத்துத் தரவேண்டும். இவற்றைவிட முஸ்லிம் மக்களின் கடற்தொழில் நாட்டு வியாபாரத் திற்கு கடன் அடிப்படையில் உதவிகள் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு அசான்பால சேகரா பதிலளிக்கையில் - தாம் குறைந்தது மூன்று அறைகளைப் புனரமைத்துத் தருவோம் எனவும், மேலதிக புனரமைப்பு பணிகள் தொடர்பாக தமது உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாகவும் தெரிவித் தார்.

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கான 10வீத அதிகரிப்பு மார்ச்மாத நிலுவையுடன் வழங்கப்படும்

(மட்டுவில்)

தென்மராட்சிபிரதேச அலுவலகத்தின்மூலம் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியர்கட்கு -2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமும், அரசினால் அறிவிக்கப்பட்ட 10 வீத ஓய்வூதிய அதிகரிப்பை வழங்கமுடியாதுள்ளதாக, இந்த பிரதேச செயலக கணக்காளர் தெரிவித்தார்.

மாத ஆரம்பத்தில் தொடர்ச்சியாக விடுமுறை தினங்கள் வந்தாலும், பொது அமைப்புக்களினால் சுதந்திரதினம் முதல் மேற்கொள்ளப்பட்டுவந்த, உண்ணாவிரதம் மற்றும் மறியற் போராட்டங்களாலும் இந்த ஓய்வூதியக்கணிப்பு வேலைகளை நிறைவு செய்யமுடியாது போய்விட்டது.

எனவே, 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல்நிலுவை யுடன் சேர்த்து இந்த ஓய்வூதிய அதிகரிப்பை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலகக் கணக்காளர் தெரிவித்தார்.

(24)

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளை மத்திய அரசிடம் கையளிக்கும் முயற்சியை தடுத்து நிறுத்தவும்!

கல்விமான்கள் கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சனைக்கு அதிகாரப் பரவலாக்கம்மூலம் தீர்வு காணப்படவேண்டும் என பலர் ஏற்றுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், வட - கிழக்கில் மாகாண சபைகளின் பொறுப் பிலுள்ள பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் என்ற போர்வையில், மத்திய அரசிடம்கையளிக்க முற்படும் நடவ டிக்கையை தடுத்து நிறுத்துமாறு கல்விமான்கள் வேண்டு கோள்விடுத்துள்ளனர்.

போர்ச்சூழலில் ஆசைவார்த்தைகாட்டும் வடக்கு - கிழக்கிலுள்ள அநேக பிரபல பாடசாலைகள், தேசிய பாடசா லைகளாக்கப்பட்டு, மத்திய அரசின்கீழ் கொண்டு வரப்பட் டுள்ளன.

இப்போது சமாதான சூழலிலும், தேசிய பாடசாலைகளாக மாற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன. தேசிய பாடசாலை என்பது, கௌரவ அந்தஸ்தாக கருதும் அடி மைப்போக்கு காரணமாகவே, சிலர் இந்த முயற்சிகளுக்கு துணைபோவதாக ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது செங்கலடி மத்திய கல்லூரியை தேசியபாடசாலையாக்க, பாடசாலை அபிவிருத் திச் சங்கம் முயற்சிகளை எடுத்துவருகின்றது. அண்மையில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்தி பொதுக்கூட்டத்தில், தேசிய பாடசாலையாக்கினால் பல வளங்கள்கிட்டும் என்று கூறி, பெற்றோரின் தீர்மானமும் பெறப்பட்டிருப்பதாக கூறப்பட் டுள்ளது.

குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள்குறித்து மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆய்வு!

(யாழ்ப்பாணம்)

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த இருபிரதிநிதிகள், நேற்று யாழ்.மாவட்டத்தின் சகலபகுதிக ளுக்கும் விஜயம் மேற்கொண்டு, யாழ்.மாவட்டத்தின் தற் போதைய நிலைகுறித்து ஆராய்ந்துள்ளார்கள்.

அந்த ஒன்றியத்தின் ஆலோசகரான, டொக்டர் அனித்தா நேசையா, மற்றும் திட்டமிடல் அதிகாரி முரளிதரன் வாசு தேவன் ஆகிய இருவருமே யாழ்மாவட்டத்தின் பலபகு திகளுக்கும் விஜயம் மேற்கொண்டு, யாழ் மக்களின் நிலை குறித்துக் கேட்டறிந்துள்ளார்கள்.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு நேற்றுக் காலை 10 மணியளவில் சென்ற இவர்கள், அங்குள்ள விசாரணை அதிகாரிகளை சந்தித்து உரையாடியுள்ளனர். யாழ்மாவட்டத்தில் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் பற்றி அங்கு விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் யாழ்.கோயில் வீதியில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணை யத்தில், யாழ்மாவட்டத்திலுள்ள கிராமமட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப் பொன்றை நடத்தியுள்ளனர்.

தொடர்ந்தும் இவர்கள் வடக்கு - கிழக்குப்பகுதிகளி லுள்ள, ஏனையமாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொள் ளுவதுடன், அங்குள்ள மக்கள் பிரச்சினைகள் குறித்தும் ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ப)

சந்திப்புக் களம் விஜேந்திரன்

கட்டுக்கோப்பான தேசப்பற்றினை கூட்டுறவின் மூலம் உருவாக்கமுடியும்

இன்றைய கூட்டுறவு, காலமாற்றங்களிற்கேற்ப ஒவ்வொரு கூட்டுறவு அமைப்புக்களும் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். தனியே நிவாரணம் கொடுப்பதனையும், வியாபாரச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளாது, மக்களின் தேவையுணர்ந்து அவர்களின் தன்மைக்கேற்ப உற்பத்திகளை மேற்கொண்டு, அவர் களது தேவைகளை இலகுவாக நிறைவுசெய்ய முன்வரவேண்டும். இன்றைய போட்டி நிறைந்த வியாபாரச் சந்தையில் ஏ.9 பாதை திறந்தபின் மக்களின் ஆடம்பரச் செலவுகள் அதிகரித்துள்ளன. ஆடம்பர வாழ்வை தூண்டும் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், ஆடம்பரப் பொருட்களும் அளவுக் கதிகமாகவுள்ளன.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவராகவும், நல்லூர் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் நீண்டகாலம் செயற்பட்டுவரும் கூட்டுறவாளர் - பெரியதம்பி கனகசபாபதியினைச் சந்தித்து கூட்டுறவு தொடர்பான கருத்துக்களைக் கேட்டபொழுது, கூட்டுறவு தொடர்பான பல கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அவர் தொடர்பான சிறு அறிமுகத்துடன், நாம் உரையாடலை ஆரம்பித்தோம்-

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், சிறந்த உதைபந்தாட்ட வீரருமான கனகசபாபதி - விவசாயத்தை மேற்கொண்டபோதிலும், தனது சிறுவயதிலிருந்தே பொதுப்பணிகளில் தன்னை இணைத்துக்கொண்டார்.

கூட்டுறவில் உங்களது பிரவேசம் பற்றியும், கூட்டுறவில் இன்றைய எதிர்கால செயற்பாடுகளைப் பற்றியும் பகிர்ந்துகொள்வீர்களா என, எமது உரையாடலை ஆரம்பித்தோம்.

நான் எனது 14ஆவது வயதில் இணுவில் கிழக்கு இளைஞர் சங்கத்தில், செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டு செயற்படத் தொடங்கியதே எனது முதல் பொதுப்பணி. அவ்வாறே அதில் ஏற்பட்ட ஈர்ப்பினால், 1959 ஆம் ஆண்டில் ஜோதி இமை விவசாயிகள் சங்கத்தையும், 1962 ஆம் ஆண்டில் கோண்டாவில் விவேகானந்தா சனசமூக நிலையத்தையும் ஆரம்பித்தேன். 1986 இல் நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும், 1997 இல் யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுச் செயற்பட்டுவருகிறேன்.

கூட்டுறவு என்னும்போது, அதன் பணிகள் கிராமரீதியாகவே மேற்கொள்ளவேண்டும். கிராமிய மட்டத்தில் அனைவரும் அங்கத்துவம் பெறுவதன்மூலம், கூட்டுறவுடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக நல்லபயனை அடைய முடியும். இதன்மூலம் கட்டுக்கோப்பான சமூகத்தை உருவாக்குவதுடன், சமூகத்தலைவர்களையும், சமூக முன்னோடிகளையும் உருவாக்கமுடியும். இதற்கான பயிற்சிகளையும் வேறு பல செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

கூட்டுறவு அமைப்புக்கள் மனிதப்பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. சமயம், சமூகம், அரசியல் என இவற்றிற்கு அப்பால் சமூகத்தைக் கூட்டுறவுடன் இணைத்து, அவர்களின் தேவைகளை உணர்ந்து செயற்படும் பக்குவம் ஒவ்வொரு கூட்டுறவாளரிற்கும் வரவேண்டும். ஐக்கியமாக ஒன்றுபட்டு நாணயமாகச் செயற்படுபவர்களாக ஒவ்வொரு கூட்டுறவாளனும் தம்மை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், கூட்டுறவானது 1917 ஆம் ஆண்டு கரவெட்டிப் பிரதேசத்தில் ஐக்கிய நாணயச் சங்கம் என்ற பெயரில் கூட்டுறவு ஆரம்பமானது. பொருளாதாரரீதியில் நலிவடைந்த மக்களுக்கு, பரஸ்பரம் உதவிபுரியும் நோக்கில் ஆரம்பமான இந்த அமைப்பானது, உலர் உணவு விநியோகம், விவசாய உபகரண கடன் விற்பனை, நியாயவிலையில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனைக்கிளைகள், நிதிச் சேவைகள் என மிகச்சிறப்பாகச் செயற்பட்டு வந்தபோதிலும், திறந்த பொருளாதாரக் கொள்கைமூலம் வியாபார நோக்கில் போட்டிகளை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

இவை எமது பணிகளின் வேகத்தைக் குறைத்தன. கூட்டுறவுச் சங்கங்களிற்கு சவாலாக அமையும் விடயங்கள் ஒவ்வொரு தனி மனிதனையும் பாதிக்கும். இதனை உரிய முறையில் எதிர்கொள்வதாயின், ஒவ்வொரு வரும் கூட்டுறவுடன் தம்மை இணைத்துக் கொள்ளவேண்டும். இன்று மக்கள் கூட்டுறவை மறந்தவர்களாக மாறிவருகிறார்கள். முன்பு கூட்டுறவுச் சங்கங்களில்தான் சில பொருட்களை வாங்கமுடியும் என்ற நிலை இருந்தது. ஆனால், காலமாற்றங்களினால் இந்த நிலை தொடரவில்லை. ஒவ்வொருவரும் எமது நிறுவனந்தான் கூட்டுறவு அமைப்புக்கள் என்று பற்றும், விசுவாசமும் உள்ளவர்களாக கூட்டுறவு அமைப்புக்களை வளர்க்கவேண்டும். முன்பு விலைக்கழிவுகள், பொருட்கழிவுகள் என சலுகைகள் பாவனையாளர்களிற்கு வழங்கப்பட்டன. ஆனால், இவை அரசாங்கக் கொள்கை மாற்றத்தாலும், வரி நடைமுறையாலும் செயலிழந்துபோயின.

கூட்டுறவு அமைப்புக்களை மக்களுடன் இறுக இணைக்கும் நோக்கில், புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. இதில் நுகர்ச்சிக்கடன் திட்டங்கள், பயிற்சிகள், பிரிவுகள், செயற்திட்டங்கள் என கால மாற்றங்களிற்கு ஏற்ப பல மாற்றங்களை செயற்படுத்தி வருகிறோம். இவற்றுடன் 2004 ஆம் ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்று, தை மாதத்தை கூட்டுறவு மாதமாக பிரகடனம் செய்துள்ளோம். இதன்மூலம் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு கருத்தரங்குகள், கலை நிகழ்வுகள், போட்டிகள் என கிராம ரீதியிலும், பிரதேச ரீதியிலும் பல முன்னேற்பாடான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். ஒவ்வொரு சங்கக்கிளைகள் ஊடாக, புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதுடன், மூத்த கூட்டுறவாளர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றுவருகின்றன.

பொதுப் பணிகளில் தம்மை இணைத்துக் கொள்பவர்கள், பலவிதமான விமர்சனங்களிற்கும், கண்டனங்களிற்கும் ஆளாகவேண்டிவரும். இவற்றைக் காரணம்காட்டி இந்தப் பணிகளில் இருந்து ஒதுங்காது, விமர்சனங்களிற்கான உண்மைக் காரணங்களை இனங்கண்டு, அதற்கேற்ப வாழப் பழகிக்கொள்ள வேண்டும். விமர்சிப்பவர்களையும் சேவையில் இணைத்துக்கொண்டு, அவர்களுக்கென சில பொறுப்புக்களையும் வழங்கி, அவர்களை செயற்பட வைக்கும்போது, அதன் அனுபவத்தையும் அசௌகரியங்களையும் அனுபவிக்க நேரிடும். இதன்மூலம், பொதுப்பணிகளின் பக்குவத்தையும், அதன் ஆளத்தையும் அறியாதவர்களையும் இணைத்துக் கொள்ளமுடியும். எந்த ஒரு செயற்பாடுகளுக்கும் எதிர்த்தாக்கம் இருக்கும்போதே, அவை சுவாரஸ்யமாகின்றது. இதனூடாவே வளரவும்முடியும்.

இப்போது கூட்டுறவுச் சபையில் 132 சங்கங்கள் அங்கத்துவமாக உள்ளது. கூட்டுறவுச் சபையினால் கல்வி விஸ்தரிப்பு, கூட்டுறவுக் கல்வி, ஆங்கில போதனை, கணணி வகுப்புக்கள் என அங்கத்தவர்கள், பணியாளரிற்கும், வெளிவாரியானவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றை கிராம, பிரதேசரீதியாக விஸ்தரித்து செயற்படுத்தவுள்ளோம். கிராமங்கள் விழிப்படைவதன் ஊடாகவே - பிரதேசமோ, மாவட்டமோ வளர்ச்சியடையும். அவ்வாறே இவை கால மாற்றத்தில் தம்மையும் இணைத்துக்கொள்ளும்.

இன்றைய கூட்டுறவு, கால மாற்றங்களிற்கேற்ப ஒவ்வொரு கூட்டுறவு அமைப்புக்களும் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். தனியே நிவாரணம் கொடுப்பதனையும், வியாபாரச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளாது, மக்களின் தேவையுணர்ந்து அவர்களின் தன்மைக்கேற்ப உற்பத்திகளை மேற்கொண்டு, அவர்களது தேவைகளை இலகுவாக நிறைவுசெய்ய முன்வரவேண்டும். இன்றைய போட்டி நிறைந்த வியாபாரச் சந்தையில் ஏ.9 பாதை திறந்தபின் மக்களின் ஆடம்பரச் செலவுகள் அதிகரித்துள்ளன. ஆடம்பர வாழ்வை தூண்டும் செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், ஆடம்பரப் பொருட்களும் அளவுக் கதிகமாகவுள்ளன.

இன்று தனியாரின் வியாபாரச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இவர்களது வியாபாரத் தலையீடுகள் எல்லாத்துறைகளிலும் இடம்பெறுகின்றது. இதுவும் கூட்டுறவின் செயற்பாடுகளை பூரணமாக நிறைவேற்ற முடியாத நிலைக்கு காரணமாகும். ஒவ்வொருவரும், கூட்டுறவுடன் தன்னை இணைத்து நலிவடைந்துள்ள கூட்டுறவு அமைப்புக்கு புத்துணர்ச்சியளித்து, கூட்டுறவை கட்டியெழுப்பவேண்டும். அடிமட்ட மக்களையும் கூட்டுறவில் இணைத்து, அவர்களது வாழ்வுக்கும், பொருளாதார நலனிற்கும் பங்களிப்பு வழங்கவேண்டும். தனிமனித பொருளாதாரம் வளர்ச்சியடைய, நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும். சமதர்ம நோக்குடன் சமய, சமூக, அரசியல் பேதமின்றி ஒரே குடும்பமாக கூட்டுறவில் இணைந்து, செயற்பட ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

கூட்டுறவின்மூலம், கட்டுக்கோப்பான, தேசப்பற்று மிக்க சமூகத்தை உருவாக்கமுடியும். இவை அனுபவரீதியான உண்மை.

இவ்வாறு கூட்டுறவு தொடர்பான பல ஆழமான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட கனகசபாபதி அவர்கள் தனது 63 ஆவது வயதில் சமூகப் பணிகளில் அக்கறை கொண்டவராக செயற்பட்டுவருகிறார். கூட்டுறவுத்துறையில் நீண்டஅனுபவமும், முதிர்ச்சியும் பெற்ற ஒருவரைச் சந்தித்த நிறைவில் எமது செவ்வியை நிறைவுசெய்தோம்.

கல்வி அமைச்சருக்கு மகஜர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்

வவுனியா தேசிய கல்வியல் கல்லூரியில் நிலவுகின்ற குறைபாடுகளைக் சுட்டிக்காட்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கல்வி அமைச்சருக்கு அனுப்பிய மகஜர் இங்கு பிரசுரமாகிறது.

குறைபாடுகள் தொடருமானால் தொடர்ந்து செயற்படமுடியாதநிலை உருவாகும்

வவுனியா கல்வியற் கல்லூரியின் அவல நிலைபற்றி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

வவுனியா கல்வியற் கல்லூரியில் கல்விகற்கும் யாழ். மாவட்டத்திலுள்ள மாணவர்களின் கோரிக்கையையடுத்து, வவுனியா தேசிய கல்வியற் கல்லூரிக்கு திடீர்விஜயம் செய்த சிவாஜிலிங்கம் அங்குள்ள குறைபாடுகளை நேரில் பார்வையிட்டு அறிந்துகொண்டார்.

இது சம்பந்தமாக சிவாஜிலிங்கம் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் இங்கு பிரசுரமாகிறது.

வவுனியா கல்வியியற் கல்லூரி - நிரந்தர பீடாதிபதி, பதிவாளர் இல்லாத நிலையில் இயங்கிவருகின்றது. இங்கு பீடாதிபதியாக பணியாற்றுபவர் நிரந்தர பீடாதிபதியாக நியமிக்கப்படவேண்டும் எனக்கோரியுள்ளனர். மேலும், 50 விரிவுரையாளர்கள் ஆளணியில் இருந்துபோதும், 35 விரிவுரையாளர்களே சேவையில் உள்ளனர். இவர்களில் 15 விரிவுரையாளர்களே நிரந்தரமானவர்கள். ஏனைய 20 பேரகளும் பாடசாலைகளில் இருந்து இணைக்கப்பட்டவர்களாவர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தக் கல்வியற் கல்லூரியின் பின் புறப் பகுதிகளில் பாதுகாப்பு வேலிகளோ, மதில்களோ இல்லாமையினால், இந்தக் கல்லூரி மாணவர்களுக்கு வெளியாரின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இரவு வேளைகளிலும் பெண்கள் விடுதிப் பகுதிகளில் காடையர் நடமாட்டம் அதிகரிப்பதனால், பெண்கள் விடுதி மாணவிகள் அச்சமடைந்துள்ளனர். விவசாயபீட மாணவர்களின் பரீட்சார்த்த பயிர்ச்செய்கைகள் கால்நடைகளால் அழிக்கப்பட்டுள்ளன. கல்லூரியை அழகுபடுத்துவதற்காக நாட்டப்பட்டுள்ள பூச்செடிகளும் கால்நடைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கல்லூரியில் சீரான குடிநீர் விநியோகம் இல்லாமையினால், கல்லூரி மாணவர்கள் குடிநீரைப் பெறுதற்கு பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். ரி.ஈ.டி திட்டத்தின் கிழ் 18 மில்லியன் ரூபா செலவில் பெரிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுள்ள போதிலும், அங்குள்ள மோட்டார் இயந்திரம் சீராக இயங்காததினால் நீர்விநியோகம் பாதிப்படைந்துள்ளது. அத்துடன், நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி இன்றுவரை கல்லூரியின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை.

கல்லூரி வளவிற்குள்ளே உள்ள மற்ற கல்விப்பிரிவின் பாதுகாப்பு இன்மையால் பல உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன. இப் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த மின் உபகரணங்களும் சேதப்படுத்தப்பட்டும், திருடப்பட்டும் இருக்கின்றன.

இலங்கையில் 17 தேசிய கல்வியற் கல்லூரிகள் உள்ளன. இதில் 4 தேசிய கல்வியற் கல்லூரிகள் மாத்திரமே தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு உருவாக்கப்பட்டன. இதில் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில், 60 சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால், தமிழ் மாணவர்களின் அனுமதி பாதிக்கப்பட்டுள்ளது. தென்பகுதி தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கு இந்தச் சிங்கள மாணவர்களை மாற்றி, வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் தொகையை அதிகரிக்கவேண்டும்.

இங்கு 6 எழுது வினைஞர்களுக்கு 3 எழுதுவினைஞர்கள் மட்டுமே உள்ளனர். காவலாளிகள், தொழிலாளர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இந்தக் குறைபாடுகளினால் கல்லூரிச் செயற்பாடுகள் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன.

இந்தக் குறைபாடுகள் தொடருமானால், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி செயற்பட முடியாத நிலைமை ஏற்படும் எனவும் சிவாஜிலிங்கம் அந்த மகஜரில் கூறியுள்ளார்.

இந்தக் குறைபாடுகள் சம்பந்தமாக வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேசனது கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளார்.

ஒசாமா பின்லேடனின் கார்ச்சாரதி இரண்டு வருடங்களுக்குமுன் கைது!

ஒஸாமா பின்லேடனின் கார்ச் சாரதியாக கடமைபுரிந்த "சலிம் அகமட் கம்டன்" 2 ஆண்டுகளுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு 'குவட்டனோமோ'வில் அமைந்துள்ள முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவ ரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

கம்டன் இரண்டு ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என அமெரிக்க கடற்படை அதிகாரி சால்ஷ் சுவிப்ற் தெரிவித்தார்.

இதுவரை கம்டனுக்கெதிராக குற்றச்சாட்டுகள் எவையும் தாக்கல் செய்யப்படவில்லை 34 வயதுடைய கம்டனுக்கெதிராக இராணுவ நீதி மன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதனிடையே அமெரிக்க கடற் படை அதிகாரியான சால்ஷ் சுவிப்ற் கருத்துத் தெரிவிக்கும்போது - ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் அமைந்துள்ள 'கந்தகாரில்' பின் லேடனுக்குச் சொந்தமான பண்ணை ஒன்றில் பின்லேடனின் வண்டிச் சாரதியாக கடமையாற்றிக் கொண்டி ருந்த வேளையில் இவர் கைது செய்யப்பட்டார் எனவும். முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில்- பின்லேடனுடன் நேரடித் தொடர்புகள் கொண்டுள்ளவர் எனவும் தெரிவித்தார்.

ஐப்பான் படையினர் தங்கியிருந்த கட்டடமருகில் ஈராக்கில் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக்கின் தென்பகுதியில் ஐப்பானிய துருப்பினரின் முகாமுக்கருகில் மோட்டார் குண்டொன்று வெடித்துள் ளது. குண்டு வெடித்த இடத்திற்கு அருகில் காணப்பட்ட கட்டடங்களின் யன்னல் கண்ணாடிகள் உடைந்து சிதறி யதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஐப்பானியத் துருப்புக் ளுக்கு காயமேற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை ஐப்பானியத் துருப்புக்கள் 'சமவா' எனப்படும் இந்தப் பிரதேசத்திற்கு மனிதநேயப் பணிகளுக்கென அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே பக்தாத்தில் இரு அமெரிக்க போர்வீரர் கள் பாதையோரக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுள் ளார்கள். வேறொரு படையினர் காயமடைந்தார். இந் தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அமெரிக்க அதி காரிகள் இந்தத் தாக் குதல் தொடர்பாக விசாரணைகள் மேற் கொண் டு வருகின் றனர். ஈராக்கில் இது வரை 370 அமெரிக் கப் போர் வீரர் கள் கொல்லப்பட்டுள்ளார் கள்.

இதேவேளை - படையில் ஈராக்கியர்களை சேர்த்துக் கொள்வதற்கான தேர்வுகள் நடத்தும் காலத்திலிருந்து தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

ஷியா முஸ்லிம்களின்

ஆன்மீகத் தலைவரைச் சந்திக்க ஐ.நா.குழு ஈராக்கிற்கு விஜயம்!



ஈராக்கின் 'ஷியா' முஸ்லீம்களின ஆன்மிகத் தலைவர் 'ஆயதுல்லா அலி அல் சிஷ்ரனி'யை சந்தித்து பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வ தற்கு ஐக்கிய நாடுகளின் குழு வொன்று புனிதநகர் 'நயாவ்' இல் அமைந்துள்ள அவரது இல்லத் திற்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் நடத்தப்படாமல் ஈராக்கில் அதிகார மாற்றத்திற்குக் கடுமையான எதிர்ப்பை 'ஆயதுல்லா சிஷ்ரனி' தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஈராக்கியர் களுக்கெதிராக தாக்குதல்கள் தற் போது அதிகரித்துவருகின்றன.

இதனிடையே, 'அல் கொய்டா' வுடன் தொடர்புடைய 'அபு முஸாப் அல் சர்கவி' - ஈராக்கின் அமெரிக்க நிர்வாகிகளுக்கு அனுப்பியுள்ள கடி தத்தில் - ஈராக்கில் வாழும் ஷியா, சுனி இஸ்லாமியக் குழுக்களிடையே பிரிவினையைத் தூண்டுவதற்கான தாக்குதல்களை அதிகரிக்கப்போவ தாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் 11 பக்கங்கள் கொண்ட கடிதத்தத்தில் உள்நாட்டுப்போர் ஒன்றை ஆரம்பிப்பதன் மூலமே கூட் டுப்படையை வெல்ல முடியுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதிகாரம் ஈராக்கியர் களிடம் கையளிக்கப்படும் காலம் நெருங்கும்போது தாக்குதல்கள் அதிகரிக்கப்படலாமென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இதனிடையே, யூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சூழ்நிலை ஈராக் கில் காணப்படவில்லை எனவும் இதன்காரணமாகவே, புதிய அரசிற் கான அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப் படவுள்ளனர் எனவும் அமெரிக்க நிர்வாகம் தெரிவித்திருந்தது.

ஈராக்கிய சனத்தொகையின் அறு பது வீதமானவர்கள் ஷியா முஸ்லீம் களாகும். அம்மக்களை பிரதிநிதித் துவப்படுத்துவதற்கு தேர்தல் அவசி யம். இதன் காரணமாகவே ஷியா முஸ்லீம்களின் ஆன்மிகத் தலைவர் 'ஆயதுல்லா' கருத்துத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கெயிட் ஜனாதிபதியை பதவி விலகக்கோரி அந்நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டம்!

கெயிட்டியில் ஜனாதிபதி ஜீன் பெற்றாண்ட சுறிஷ்டைட்டை பதவி யில் இருந்து விலகுமாறு கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வரு கின்றன. தனது பதவிக்கால எல் லையான அடுத்த ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதிவரை பணிபுரியவுள்ள தாக ஜனாதிபதி பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

கெயிட்டியின் நகரான 'செயின்ட் மார்கில்' புதன்கிழமை நடந்த கல வரத்தில் மேலும் மூவர் கொல்லப் பட்டனர். இதன்மூலம் இறந்தவர் களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது.

இதனிடையே, ஐக்கிய நாடுகள் சபையின் குழு ஒன்று வன்முறை கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தவுள்ளது.

மனிதநேய பிரச்சினைகளான சுகாதாரம், கல்வி, உணவு தொடர் பான கணிப்பீடுகளை மேற்கொள்வ தற்கு ஐக்கிய நாடுகள் சபையின் குழு தீர்மானித்துள்ளதாக பி.பி.சியின் 'சுசன்னா பிறேஷ்' தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்களும், அமைதியின்மையும் அதிகரித்து வருவது தொடர்பாக அமெரிக்கா தனது ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ளது.

போராளிகள் வசமிருந்த 'செயின்ற் மார்க்' நகரம் அரச படையினரால் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தப் பிரதேசம் போரா ளிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலத்தில் 20 இற்கு மேற்பட்ட அரச ஆதரவாளர்களின் வீடுகள் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளதாக போராளிக் குழு வைச் சார்ந்த ஒருவர் தெரிவித்துள் ளார்.

சுப்பிரமணியம் சுவாமியை எதிர்த்து மதுரையில் போட்டியிட முடிவு!

நடராஜன் எச்சரிக்கை

(மதுரை)

மதுரை தொகுதியில் ஜன தானக் கட்சித் தலைவர் சுப்பிர மணியம் சுவாமி போட்டியிட ஆத ரவு தந்தால், சுவாமியை எதிர்த்து நான் போட்டியிடுவேன் என்று முதல் வர் ஜெயலிதாவின் தோழி சசிகலா வின் கணவர் நடராஜன் எச்சரித்துள் ளார்.

மதுரையில் செய்தியாளர்களி டம் நடராஜன் பேசுகையில், மது ரைத் தொகுதியில் போட்டியிட ஆத ரவு தருமாறு அ.தி.மு.கவிடம் சுப் பிரமணிய சுவாமி பகிரங்கமாகக் கோரிவருகிறார். ஆனால், இதே சுவாமிதான், 1999ஆம் ஆண்டில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேற காரணமாக இருந்தார்.

எனவே, சுவாமிக்கு அ.தி.மு.க ஆதரவு தரக்கூடாது - மதுரைத் தொகுதியையும் ஜனதாக்கட்சிக்கு ஒதுக்கக்கூடாது - மீறி ஒதுக்கினால், நான் மதுரைத்தொகுதியில் சுவா மியை எதிர்த்துப் போட்டியிடுவேன். அ.தி.மு.கவினர் ஆதரவு எனக்கு கிடைக்கும்.

புதுக்கோட்டைத்தொகுதியில் திருநாவுக்கரசர் போட்டியிட அ.தி. மு.க முட்டுக்கட்டை போடக்கூடாது. அந்தத்தொகுதியை பா.ஜ.கவுக்கு ஒதுக்கவேண்டும். இல்லாவிட்டால் அங்கு அ.தி.மு.க ஜெயிக்கமுடியாது.

திருநாவுக்கரசுக்கு இடம் கிடைத் தால் தான் அங்கு வெல்லமுடியும். அவரது ஆதரவு இல்லாத யாரும் அங்கு வெல்லமுடியாது என்றார்.

நடராஜனை விட்டு மனைவி சசிகலா பிரிந்து வெகுகாலமாவது குறிப்பிடத்தக்கது. இப்போது தனது முதலெழுத்தைக் கூட சசிகலா மாற் றிக்கொண்டுவிட்டார் என்பது குறிப்பி டத்தக்கது.

தென்கொரியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகளால் குளோனிங் முறையில் கலங்கள் உருவாக்கம்!

தென்கொரியாவைச் சேர்ந்த விஞ் ஞானிகள் குளோனிங் முறையில் கலங்களை உருவாக்கியுள்ளனர்.

முதுமையில் தோன்றும் 'அல் செயட்மேர்ஷ்' எனப்படும் ஞாபக மறதியால் சிரமப்படும் நோயாளியின் மூளைக் கலங்களை மாற்றீடு செய் வதற்கு இந்தக் கலங்கள் உதவ முடியுமெனவும் தெரிவித்துள்ளனர்.



நோயாளி ஒருவரின் உடலில் வேறு ஒருவர் உறுப்புக்களை செலுத்த முற்படும் வேளையில் வேற்று உறுப்புக்களை உடல் எதிர்க்கின் றது.

ஆனால், கொரிய விஞ்ஞானிகள் புதிய முறையில் கலங்களை உரு வாக்கியுள்ளனர். இவை உடல் உறுப்புக்களில் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குவதில்லை.

இவ்வகையான கலங்கள் எவ் வாறு உருவாக்கப்படுகின்றன என விஞ்ஞானிகள் தெரிவிக்கையில் -

முதலில் 30 பெண்களின் உடல் கலங்களில் இருந்து மரபணுக்கலங் களை வெளியேற்றி பின் அதே பெண்களின் பெண் முட்டையை இணைத்து கலங்களை நோயா ளிக்கு பொருத்தலாமெனத் தெரிவித் தனர்.

வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம்
யாழ்.மாவட்டம்

பதவி வெற்றிடங்கள்

யாழ்.மாவட்டத்தில் 'யுனிசெப்' அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெளிக்கள உத்தியோகத்தர் (Field officers)
வெற்றிடம்: தென்மராட்சி - 03
வலிகாமம் - 03
வேதனம்: மாதாந்தம் ரூபா 6000.00
தகைமைகள்: G.C.E.A/L சித்தி

மோட்டார் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் உள்ளோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

குறிப்பு:
தென்மராட்சிப் பிரதேசத்திற்கு விண்ணப்பிப்போர் சாவகச்சேரிப் பிரதேசத் திற்கு அண்மையில் வசிப்பவராகவும், வலிகாமப் பிரதேசத்திற்கு விண்ணப் பிப்போர் உடுவில் பிரதேசத்திற்கு அண்மையில் வசிப்பவராகவும், இருத்தல் விரும்பத்தக்கது. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களுடன் முழு மையாகப் பூர்த்திசெய்யப்பட்ட சுயவிவரக் கோவையையும் 21.02.04 அன்றோ அல்லது அதற்கு முன்போ கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் கிடைக் கும் வண்ணம் அனுப்பிவைக்கவும். நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்
வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம்
இல. 63, பலாலி வீதி,
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021-222-5932 (சி-2218)

நிறைஞ்சனலஸ் சங்கானை
பாலா, சர்மி நடித்த
காதல் கிசு கிசு
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
X-MEN II
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த
ஜெயம்
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)
18 ஆம் திகதியிலிருந்து
எங்கள் அண்ணா
(சி-2197)

இதோ! மூன்று படம் இலவசம்!!

எமது நிறுவனத்தில் பிரதியாக்கம்செய்யும் சகல விதமான புகைப்படச் சுருள்களுக்கும் மூன்று புகைப்படம் இலவசமாக வழங்கப்படும். உங்கள் புகைப்படச் சுருள் களைப் பெற்றுக்கொள்ள

ஸ்கை எலக்ரோனிக்ஸ்
10 ஸ்ராண்லி வீதி,
யாழ்ப்பாணம்

லேன் சண்,
119, கண்டி வீதி,
சாவகச்சேரி

மூர்த்தி ஸ்ரூடியோ அன் கலர் லாப்
பிரதான வீதி மானிப்பாய்.
(சி-2212) T.P:- 021-222-2884

நமது ஈழநாடு
The Daily Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

"நான் நினைச்சது மாதிரியே நடந்திட்டுது மணியம்"

"என்ன அப்படி நினைச்சனி... ஏதாவது நல்லதை நினைச்சனியோ..."

"நல்லதென்ன நல்லது...! எல்லாம் அரசியலைப் பற்றித்தான். அரசியல்லை நல்லது நடந்தால் நாடு எங்கோ போயிருக்கும்... ஆனா அப்படி நடக்க சான்ஸே இல்லை.... 39 அமைச்சர்களின் பதவி பறிப்பைப் பற்றித்தான் சொல்கிறேன்...!"

"ஓ... அதுவோ... அதை நானும் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருந்தன். இத்தனை அமைச்சர்கள் தேவையில்லையெண்டு இப்ப சொல்லுற அம்மையார்தான், முந்தி எண்பது அமைச்சர் பரிவாரங்களுடன் ஆட்சி நடத்தினவா தெரியும்தானே...!"

"ஓமோம்.... அப்ப அவருக்கு எண்பது அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தேவைப்பட்டுது... இப்ப இது அதிகமாகப் படுகுது..."

"இப்ப பாரன்... போகிற போக்கில மீண்டும் ஒரு தொங்கு நாடாளுமன்றம் அமைக்கநேரிட்டால் தனது கட்சியுடன் இணையும் அனைவருக்கும் மந்திரி பதவி கொடுத்தாலும் ஆச்சரியமில்லை...."

"அது சரி... பதவி வழங்கவும் அவர் அதிகாரத்தைப் பயன்படுத்துவார். நீக்கவும் அவவுக்கு அதிகாரம் இருக்கு...."

"இதுவும் ஒருவகையான வன்முறை நடவடிக்கைதான்... அரசியல் வன்முறை... அதாவது அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிரியின் முதுகெலும்பை முறிக்கும் வன்முறை...."

"சரியாய்ச் சொன்னாய்... ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா என்ற பாட்டுத்தான் நினைவுக்கு வருகுது. ஆராரோ சொல்வ கற்கெல்லாம் ஆடவேண்டிய நிலை அம்மையாருக்கு...!"

தெருவாசி

அரசியலமைப்பு அதிகாரங்களை ஜனாதிபதி தவறாகப் பாவிக்கிறார்

அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சரவை அந்துஸ்துள்ள அமைச்சர்களை பதவியில் இருந்து நீக்கியதன் மூலம், ஜனாதிபதி அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனநாயகத்துக்கு முரணாக பயன்படுத்தியுள்ளதாக பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுத் தேர்தல்வரை, காபந்து அரசாங்கத்தின் கீழ் அனைத்து அமைச்சுப் பதவிகளையும் தக்க வைத்துக் கொள்வது அரசியல் யாப்புக்கு ஏற்புடையது. பொதுத்தேர்தல் வரை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள இந்த விதந்துரைகளை ஜனாதிபதி மீறி இருக்கிறார்.

2001 ஆம், 2002 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதி எந்த பிரதி அமைச்சரையும், அமைச்சரவை அந்தஸ்துப் பெறாத அமைச்சரையும் பதவியில் இருந்து நீக்கவில்லை. ஆயினும், ஜனாதிபதி இந்தச் சந்தர்ப்பத்தில் முற்றிலும் மாறான கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்.

கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதில் இருந்து அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நாட்டினதோ, மக்களினதோ நலன் கருதிச் செயற்படவில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேலும் 16 இந்திய மீனவர் வடமராட்சியில் பிடிபட்டனர்

வடமராட்சி வடக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த 27 இந்திய மீனவர்கள், உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டதுடன், அவர்கள் பயன்படுத்திய 5 பிளாஸ்டிக் படகுகளும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவுவரை இருபடகுகளில் வந்த 11 இந்திய மீனவர்களை இன்பருட்டி மீனவர்கள் முதலில் பிடித்தனர். அதன்பின்னர், வியாழன் அதிகாலை பொலிகண்டிப் பகுதி மீனவர்கள் 3 படகுகளுடன் வந்த 16 இந்திய மீனவர்களை பிடித்து கரைக்குக் கொண்டுவந்தனர்.

இவ்வாறு உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்த 27 இந்திய மீனவரும் கரையில் வைத்து பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, இந்திய படகோட்டிகள் இருவரை பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸார் நேற்று ஆஜர்படுத்தினர். இவர்கள் இருவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (202)

மண்.....

காணப்பட்டது.

சம்பவத்தில் கணபதி சிவகுமார் (வயது 22) வயிற்றில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையிலும், பரஞ்சோதி உதயகுமார் காலில் காயமடைந்த நிலையிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (12)

மின்சாரம்....

வேளையிலே இந்த இளைஞர் மின்தாக்கத்திற்கு இலக்கானார். வீட்டில் உள்ள உறவினர்கள் அனைவரும் திருமண வீட்டுக்கு சென்றிருந்தமையால் இவரை யாராலும் காப்பாற்ற முடியவில்லை.

இவர் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றை எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவீடன் நாட்டு பிரதிநிதிகள் இன்று யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும், தமிழர் புனர்வாழ்வுக்கழக அங்கத்தவர்களையும், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரையும் சந்தித்து உரையாடிய அவர்கள் இன்று காலை 10 மணியவில் யாழ்.ஆயர் இல்லத்தில் சர்வமதத் தலைவர்களையும் சந்தித்து பேச்சுநடத்தவுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்கள்.

தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப்பணிகள் தொடர்பாகவும் ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

கொடிகாமம்....

பட்டார்.

இந்த நிலையில், அங்கு தங்கியிருந்த குடும்பப் பெண்ணின் கணவர் அயலவரின் உதவியுடன் குறித்த பொலிஸாரைப் பிடித்துக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்.

பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட முயன்ற வேளை, குறித்த பெண்ணின் ஆடைகளை பொலிஸார் கிழிக்க முற்பட்டதாகவும், அதனைத் தடுக்க முற்பட்ட இந்தப் பெண்ணின் கணவரும் பொலிஸாரால் கடுமையான தாக்குதலுக் குட்டதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் கொடிகாமப் பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (34)

புதிய....

மனங்கள் ரத்துச் செய்யப்படும். இந்தக் காலப்பகுதியில் அமைச்சரவை மற்றும் பொதுச் சேவை ஆணைக் குழுவின் அனுமதியுடன் இடம்பெற்ற நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் செல்லுபடியாகும். ஆனால், இது குறித்து மீளாய்வு செய்யப்படும்.

தவறான முறையில் இடம்பெறும் நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகளுக்கு அமைச்சர்களின் செயலாளர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த நடைமுறை அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், ஆகியவற்றுக்கும் பொருத்தமானது என்று மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அமைதிக்கு பங்கம் விளைவித்தவர் 3 மாத சிறைத்தண்டனை பெற்றார்!

(யாழ்ப்பாணம்)

மக்களின் இயல்பு நிலைக்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டி பொதுமகன் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் மூன்று மாத சிறைத்தண்டனை விதித்தது.

புலோலிப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் மதுபோதையில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையம் முன்பாக கத்தியொன்றுடன் அரை நிர்வாணமாக நின்றார். அத்துடன், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார்.

மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டதை, சந்தேகநபர் ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு மூன்று மாத சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்த நீதிவான் கத்தியினை எடுத்துச் சென்றமை தொடர்பாக ஐம்பது ரூபா குற்றப்பணத்தைச் செலுத்தவும் உத்தரவிட்டார். (202)

உயர்தரப் பரீட்சை....

உயர்தரப் பரீட்சைகளை மே மாதம் 7 ஆம் திகதி நடத்துவது தொடர்பாக, தான் யோசனைகள் முன்வைத்துள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி தெரிவித்தார்.

அல்லாவிடின், ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பித்து இரு தவணைகளில் பரீட்சை நடத்த வேண்டி வரும் என அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு இந்த வகையில் பரீட்சைகள் நடத்தும் போது, மேலதிக 6 மில்லியன் ரூபா செலவாகும் என அவர் தெரிவித்தார்.

இதைவிட, வெசாக் கொண்டாட்டங்களின் பின்னர் உயர்தரப் பரீட்சைகளை நடத்துவதன் மூலம் பரீட்சைகளைத் தொடர்ந்து நடத்தமுடியும் என பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

மகா....

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி தகவலினை கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையகம் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சிற்கு அறிவித்துள்ளதாக அமைச்சின் உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

புலிகளுடன்...

திகதி நலன்புரி நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களில் பதினெட்டு வயதுக்கு குறைந்த 6 சிறுமிகளும், 4 சிறுவர்களும் அடங்குவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுவீடன் நாட்டு எம்.பி....

அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பினை முடித்துக் கொண்ட சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் முதலானோரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான சுவீடன் நாட்டுத் தூதுவர் உள்ளிட்ட 20 பேர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பு வேட்பாளர்...

சேர்ந்து ஓர் அமைப்பாக தேர்தலில் நிற்பதற்குத் தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.

தமிழர் இக்கட்டான காலகட்டத்தில் பிரிந்து நிற்பது எமக்கு பெரும் சாபக்கேடாகும். எனவே, ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்ந்து போட்டியிடுவது வரவேற்கத்தக்கது மட்டுமல்லாது, வரலாற்றின் தேவையுமாகும்.

அதேவேளை, விடுதலை, ஒன்றிப்பு, சமாதானம், சமூக மேம்பாடு ஆகியவற்றில் சமவலுவுள்ள பெண்களை அரசியலிலும் இணைத்து பெண் விடுதலையையும், சமத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில் பெண்வேட்பாளர்களையும் நியமிக்கும்படியாக கேட்டுக்கொள்கின்றோம்.

எமது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் யாழ்.குடாநாடு முழுவதும் பரந்த அளவில் இயங்கும் 3800 அங்கத்தினரை கொண்ட 46 பெண்கள் அமைப்புக்கள் மூலம் எமது முழு ஆதரவையும் வழங்குவதற்கு ஆயத்தமாகவுள்ளோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் விவகாரங்களில்....

அல்லது அதன் உள்நாட்டு அரசியலிலோ ஒரு போதும் தலையிடாது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் செய்துகொண்ட உடன்படிக்கை கட்சியின் அரசியல் வளர்ச்சிக்கு பாரியநன்மையைப் பெற்றுக்கொடுக்கும். நாட்டின் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கு தேர்தலில் வெற்றி பெறும் கட்சிகள் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

சமாதானத்தின் மூலமே இலங்கை மக்கள் நன்மையடையக்கூடியதாக இருக்கும். நாட்டில் மீண்டும் யுத்த மேற்படுவதை இலங்கை மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென்மராட்சியில் பஸ் விபத்து....

கொடிகாமம் நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த மினிபஸ் ஒன்று மழைபெய்து கொண்டிருந்த தால் திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்து விலகி மின்கம்பத்துடன் மோதியது. இதனால், மினிபஸ் மூன்று முறை நிலத்தில் உருண்டு அருகிலிருந்த மிதிவெடி அகற்றப்படாத பிரதேசத்தினுள் தூக்கி வீசப்பட்டது.

அந்தவேளை, அந்தவீதிவழியால் பயணித்தவர்களின் உதவியுடன் வயல்வெளியினுள் தூக்கிவீசப்பட்டிருந்த மினிபஸ்ஸினுள் காயமுற்ற நிலையில, அவலகுரல் எழுப்பிக் கொண்டிருந்த பயணிகள் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு [illegible] வைக்கப்பட்டனர்.

அவர்களில் இந்துக்கல்லூரி வீதி உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த நா.மார்க்கண்டு (வயது 58) என்னும் பளை வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியில் மரணமடைந்தார். இவரது உடல் நேற்று மாலையே உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

இந்தச்சம்பவத்தின் போது, உரும்பிராயைச் சேர்ந்த நடராஜா சுரேஸ் (வயது 18), செல்லையா இராசரட்ணம் (வயது 53), கோப்பாயை சேர்ந்த சி.பகிரதன் (வயது 19), உரும்பிராயைச் சேர்ந்த ந.முருகையா (வயது 71), கோப்பாய் வடக்கைச் சேர்ந்த செ.செல்லம்மா (வயது 65) செ.தேவநாயகி (வயது 45), தாவடியைச் சேர்ந்த மு.மீரா (வயது 18), கோ.பவானந்தன் (வயது 25), நீர்வேலியைச் சேர்ந்த வே.சுவர்ணலதா (வயது 30), ஆ.துரைசிங்கம் (வயது 50), த.மரியம்மா (வயது 72), ய.துஸ்யந்தினி (வயது 24), சி.நந்தினி (வயது 45), சி.சிவமைந்தன் (வயது 11), தேவகி (வயது 45), ந.யோகேஸ்வரி (வயது 28), சரஸ்வதி (வயது 28), கி.விமல்ஸ் (வயது 38), த.அரிலம்மா (வயது 64), செ.சசிகலா (வயது 35) ந.வேலாயுதம் (வயது 65), சிவானந்தராசா (வயது 55) ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ப-தீ-24-39)

மரண அறிவித்தல்

கிருஸ்ணர் சின்னையா

(ஓய்வுபெற்ற அதிபர் - தெல்லிப்பழை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்ட கிருஸ்ணர் சின்னையா அவர்கள் 11.02.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், ஜசிந்தா நடராசா (அமெரிக்கா), ஜனீறா (ஆசிரியர், இரத்மலானை இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் நாளை (14.02.2004) சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ஜனீறா (மகள்)

39/4 ஒபன் பகுதி, தெஹிவளை
(சி-2217) தொலைபேசி இல. - 0112 727549

இல.267, நாவ[illegible]தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.